பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 20 வெள்ளிக் கிழமை 04.04.2025 கதிர் 147

## இனி இது ரகசியம் அல்ல!

நேற்று யாழ்ப்பாணம் நாக விகாரையில் ஒரு கூட்டம். தையிட்டி விகாரைப் பிரச்சினை தொடர்பில் பிக்குகள், ஏனைய மதகுருக்கள், காணி உரிமையாளர்கள் ☞2

# மீண்டும் மீண்டும் பொய்யைகூறி ஏமாற்றாது சிந்தித்து செயற்படுக

## ஆளும்தரப்பிடம் சஜித் வலியுறுத்து

மீண்டும் மீண்டும் பொய் கூறி மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்காது இனியாவது சிந்தித்து செயற்படுமாறு ஆளும்தரப்பிடம்கேட்டுக்கொள்கின்றோம் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் வருடாந்த மாநாடு நேற்று வியாழக்கிழமை கொழும்பு - ஹைட் பார்க் மைதானத்தில் இடம்பெற்றது. இம்மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2020 பெப்ரவரிலேயே ஐக்கிய மக்கள் சக்தி உருவானது. வெறும் 5 வயதில் இரு பொதுத் தேர்தல்களையும், ஜனாதிபதித் தேர்தலொன்றையும் எதிர்கொண்டிருக்கிறது. இதன்போது ஏற்பட்ட பின்னடைவுகள் மகிழ்ச்சிக் குரியவையல்ல. ஆனால் ஏனைய கட்சிகள், பொய்கூறும்போட்டியில்வெற்றி பெற்று ஆட்சியதிகாரத்தை கைப்பற்றிய நிலையில், நாம் உண்மையைக் கூறி தோல்வியடைந்தோம் என்பதில் மகிழ்ச்சியே.

பழைய பாரம்பரிய கட்சிகள் அழிந்து கொண்டிருக்கின்றன. எனவே மக்களைப் பாதுகாப்பதற்குள்ள ஒரேயொரு மாற்று தீர்வு ஐக்கிய மக்கள் சக்தி மாத்திரமே. தற்போதிருப்பது முற்று முழுதாக ☞8

## அமெரிக்க வரிப் பிரச்சினையை தீர்க்கும் முழுப் பொறுப்பையும் ஏற்றது ஆளும்தரப்பு

அமெரிக்காவால் விதிக்கப்பட்டுள்ள ஏற்றுமதி வரி பிரச்சினையை மக்களின் நலனை மையமாகக் கொண்டு நிவர்த்தி செய்வதற்கான முழுப் பொறுப்பையும் ஆளும்தரப்பு ஏற்கிறது. அந்த வகையில் சர்வதேச பங்காளிகளுடன் கைகோர்த்துநாட்டின்பொருளாதாரத்தையும்எதிர்காலத்தையும் பாதுகாப்போம் என அயலுறவு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் ☞2

## ஆடை, உணவு ஏற்றுமதி துறைகள் அமெரிக்க வரி விதிப்பால் பாதிப்பு

### பொருளாதார பிரதி அமைச்சர் சுட்டிக்காட்டு

அமெரிக்க இலங்கையின் ஏற்றுமதிப் பொருள்களுக்கு விதித்துள்ள 44 சதவீத வரியால் ஆடை உற்பத்தி, உணவு உற்பத்தி உள்ளிட்ட துறைகளின் ஏற்றுமதிகளுக்கு கணிசமான அளவில் பாதிப்பு ஏற்படும். இதனால் இலங்கையின் உற்பத்திக்கானகேள்விகள்குறைவடைந்து உற்பத்தியாளர்கள்பாதிக்கப்படலாம். ☞8

## அமெ. வரி தொடர்பில் ஜனாதிபதி கலந்தாய்வு

அமெரிக்காவின் புதிய வரி விதிப்பு குறித்து அரசாங்கத்திற்கு பரிந்துரைகளை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட குழு மற்றும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு இடையிலான சந்திப்பொன்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தவரிவிதிப்புபின்னணிஅடிப்படையிலும், ☞2

### கடவுச்சீட்டு ஒளிப்படத்தில்

# தமிழ் பெண்கள் பொட்டிடத் தடை

### இந்து மத அடையாளங்களுக்கும் விலக்கு

கடவுச்சீட்டு பெறும்போது தமிழ்ப் பெண்கள் பொட்டிடக்கூடாது என்றும் இந்து மத அடையாளங்கள் தரிக்கப்பட்டிருக்கக்கூடாது என்றும் புதிய நடைமுறைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. அரச உரிம்மம் பெற்ற ஒளிப்படப் பிடிப்பாளர் சங்கம் இந்தப் புதிய நடைமுறை குறித்து இலங்கை முழுவதும் உள்ள ஒளிப்படப் பிடிப்பாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ள இந்தப் புதிய நடைமுறை, ஈழத் தமிழர்களின் இன, மத அடையாளங்களை வலிந்து பறிக்கும் நடவடிக்கை என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கண்டித்துள்ளார்.

ஈழத் தமிழர்களின் இன, மத அடையாளங்களை உறுதிசெய்யுமாறு தெரிவித்து இலங்கை குடிவரவு, ☞2

## இன்று மாலை வருகிறார் மோடி

ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவின் அழைப்பின் பேரில், இந்திய பிரதமர் நரேந்திர மோடி மூன்று நாள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இன்று மாலை கொழும்பை வந்தடையவுள்ளார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான 'நூற்றாண்டுநட்புறவின் வளமான எதிர்காலத்துக்கான உறுதிப்பாடு' என்ற எண்ணக்கருவை மீண்டும்உறுதிப்படுத்தும்வகையிலான இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடன் இந்தப் பயணத்தில் இந்திய அயலுறவு அமைச்சர் ஜெய்சங்கர் உட்பட உயர்மட்ட இந்தியக் குழுவும் ☞2 இணையவுள்ளது.

## வேட்புமனு நிராகரிப்புக்கு எதிரான மனுக்கள் மீது இன்று உத்தரவு

### மேன்முறையீட்டு நீதிமன்றம் தெரிவிப்பு

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான உத்தரவு இன்று அறிவிக்கப்படும் என்றுமேன்முறையீட்டுநீதிமன்றம் அறிவித்துள்ளது.

அதன்படி, பிறப்புச் ☞8

# தையிட்டி விகாரை விவகாரத்திற்கு தீர்வு தராமலேயே நழுவி ஓடிய நீதி அமைச்சர்

### உப்புச் சப்பற்ற வகையில் தேர்தலை காரணம் காட்டினார்

தையிட்டியில் சட்டவிரோதமாக கொழும்பு அரசின் அனுசரணை மற்றும் ஆசீர்வாதத்துடன் கட்டியெழுப்பப்பட்ட விகாரை தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு என அழைக்கப்பட்ட கூட்டத்திற்கு வந்திருந்த நீதி அமைச்சர், உள்ளாட்சித் தேர்தல் காலத்தில் இந்த விடயத்தில் தான் தலையிடுவது முறையற்றது என்று கூறிக்கொண்டு, பிரச்சினை தொடர்பில் எந்தவொ-ரு தீர்வையும் தராமல் நழுவி ஓடிவிட்டார்.

அவரது அமைச்சின் கீழ் வரும் தேசிய ஐக்கியத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம் ஊடாகவே இந்தக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தையிட்டி விகாரை அமைக்கப்பட்டுள்ள காணிகளின் சொந்தக்காரர்கள், பிக்குகளும் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார்கள்.



நேற்றுப் பிற்பகல் யாழ்ப்பாணத்தில் உள்ள நாக விகாரையில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

கூட்டத்தில் நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, பிரதியமைச்சர் முனீர் முலாபீர் உள்ளிட்ட குழுவினர் கலந்துகொண்டனர். தேசிய ஐக்கியத்துக்கும் ☞8

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது .....

அனைவரையும் திரட்டி இந்தக் கூட்டம் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. நீதியமைச்சின் கீழ் இயங்கும் தேசிய ஐக்கியத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம்தான் இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது.

இந்தக் கூட்டத்திற்கு ஏன் சர்வமதத் தலைவர்கள் எல்லாம் அழைக்கப்பட்டிருந்தார்கள் என்பதே பெரிய கேள்வி. இந்தப் பிரச்சினையில் தொடர்புபட்டவர்கள், ஆக்கிரமிப்பைச் செய்துள்ள பிக்குகளும் காணி உரிமையாளர்களும் இராணுவத்தினருமே. பிக்குகள்தான் ஆக்கிரமிப்பாளர்கள். இராணுவத்தினர் ஆக்கிரமிப்பில் கட்டடங்கள் எழுப்பியதுடன் அதனை பாதுகாப்பவர்கள். ஆனால், கூட்டத்திற்கு இராணுவத்தினர் அழைக்கப்படவேயில்லை. ஏனைய மதத் தலைவர்களை மட்டும் அழைத்து இதுவொரு மதப் பிரச்சினை என்பதைப் போன்று காட்ட முற்பட்டார்கள் என்பது ஒருவிடயம்.

மற்றொன்று, நீதி அமைச்சர் தலைமையில் இந்தக் கூட்டம் நடக்கும் என்றுதான் அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால் கூட்டத்திற்கு வந்த நீதி அமைச்சரும் பிரதி அமைச்சரும் தேர்தல் காலம் என்பதால் தான் கூட்டத்தில் கலந்துகொள்வது சரியல்ல என்று கூறிக்கொண்டு நழுவிச் சென்றுவிட்டார். கூட்டத்திற்கு நாள் குறிக்கும்போது இது தேர்தல் காலம் என்பது அவருக்குத் தெரிந்திருக்கவில்லை என்பது ஆசிரியம்தரும் உண்மை.

நடந்தது அதுவல்ல என்கின்றன உள்வீட்-டுத் தகவல்கள். கூட்டத்தை ஏற்பாடு செய்தவர்கள் நேற்றுக் காலையில் காணி உரிமையாளர்களுடன் ஒரு சந்திப்பு நடத்தியிருந்தார்கள். அதில் விகாரை அமைக்கப்பட்டிருக்கும் காணியும் அதைச் சுற்றியுள்ள காணிகளும் தங்களுக்குரியவை என்பதற்கான முழு ஆதாரங்களின் பிரதிகளையும் காணி உரிமையாளர்கள் வழங்கியிருந்தார்கள். காணி உறுதி, தோம்புகள் உள்ளிட்ட எல்லா ஆவணங்களின் பிரதிகளும் வழங்கப்பட்டுள்ளன. அதன் பின்னர் விகாரையின் பிக்குவையும் இந்தக் நல்லிணக்க அ-லுவலகக் குழுவினர் சென்று சந்தித்திருந்தனர். இந்த நிலையில்தான் மாலையில் நாகவிகாரைக் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

காலையில் காணி உரிமையாளர்களிடம் பெறப்பட்ட காணி ஆவணங்களின் உண்மைத்தன்மை-குறித்து ஆராய்ந்துபார்த்த பின்னர், இந்த விவகாரத்தில் அவர்களின் பக்கம் முழு நியாயம் இருக்கும்போது தான் எதையாவது கூறப்போய் அது தேர்தல் நேரத்தில் தமது தேசிய மக்கள் சக்திக்கே பிரச்சினையாகிவிடக்கூடாது என்பதால்தான் நீதி அமைச்சரும் பிரதி அமைச்சரும் நழுவி ஓடிவிட்டார்கள். இந்தக் கூட்டத்திற்கு யாழ்ப்பாணத்திற்கான தேசிய மக்கள் சக்தி அமைப்பாளரான சந்திரசேகரனும் அழைக்கப்படவில்லை என்பதையும் கவனிக்கவேண்டும்.

தேர்தல் காலத்தில் இப்படி ஒரு கூட்டத்தைக்கூட்டி, பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தமது ஆளும்தரப்பு அக்கறையாக இருப்பதாகக் காட்டி அதன் மூலம் அரசியல் இலாபம் அடையலாம் என்று போட்ட கணக்கு, தலைகீழாக மாறி அரசியல் மோசமாகிவிடும் என்ற அச்சம் காரணமாகவே அமைச்சரும் பிரதி அமைச்சரும் சத்தம் சந்தடியின்றி ஓடிவிட்டார்கள் என்கின்றன உள்வீட்டு விடயமறிந்த வட்டாரங்கள். இப்போது தேசிய மக்கள் சக்திக்கு சொந்தச் செலவில் சூனியம் வைத்துக்கொண்ட கதையாகிவிட்டது இந்த விவகாரம். ஆப்பிழுத்த குரங்கு மாதிரி மாட்டிக்கொண்டு முழிக்கிறது.

.....................................

பருத்தித்துறை நகர சபையில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் போட்டியிடாது என்பது நேற்று உயர் நீதிமன்றத்தில் உறுதியாகிவிட்டது. அந்தச் சபையில் காங்கிரஸ் தாக்கல் செய்த வேட்புமனு நிராகரிக்கப்பட்டதற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனு மீளப் பெறப்பட்டதை அடுத்து போட்டிக் களத்திலிருந்து முன்னணி அகற்றப்பட்டுவிட்டது.

பல சட்டத்தரணிகளைக் கொண்ட காங்கிரஸின் சார்பில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அந்த மனுவில் நீதிமன்றத்தை ஏமாற்றுவதற்கான திருகுதாளங்கள் செய்யப்பட்டிருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து மனுவை மீளப் பெறுவதாக அவசர அவசரமாக அறிவித்துவிட்டார்கள் மனுதாரர்கள்.

வேட்புமனுவில் நிரப்பப்படாது விடப்பட்ட விடயங்களையும் நீதிமன்றுக்கு வழங்கிய ஆங்கில மொழிபெயர்ப்பில் நிரப்பிக் கொடுத்த விடயம் மாட்டிக்கொண்டதால் இந்த நிலை ஏற்பட்டது. காங்கிரஸின் வேட்புமனுவில் ஒரு வேட்பாளரின் சில விவரங்கள் முழுமையாகப் பதியப்படவில்லை என்பதைக் காரணம் காட்டியே அது நிராகரிக்கப்பட்டிருந்தது. அதை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் அந்த வேட்புமனுவின் ஆங்கில மொழிபெயர்ப்பு என்று சட்டத்தரணி ஒருவரின் உறுதிப்படுத்தலுடன் இணைக்கப்பட்டிருந்த ஆவணத்தில், மூலப் பிரதியில் நிரப்பப்படாத பகுதிகளும் நிரப்பப்பட்டிருந்தன.

மனுவை விசாரித்த நீதியரசர்கள் ஆயம் இந்தத் தவறை அல்லது தில்லுமுல்லைக் கண்டுபிடித்துவிட்டது. இது நீதிமன்றத்தை திட்டமிட்டு ஏமாற்ற எடுக்கப்பட்ட முயற்சி என்ற வகையில் நீதியரசர்கள் பதற்றமாக, உடனடியாக அந்தரிட் மனுவையே தாம் மீளப் பெறுவதாக சட்டத்தரணிகள் நீதிமன்றுக்கு அறிவித்து பிரச்சினையைச் சமாளித்துவிட்டனர். இந்த ஏமாற்று வேலைக்காக, வழக்கைத் தாக்கல் செய்த சட்டதரணி வழக்காடும் சட்டதரணி ஆகியோருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கவேண்டிவரும் என்று ஒரு கட்டத்தில் நீதியரசர்கள் எச்சரிக்கப்போக, பிச்சை வேண்டாம் நாயைப் பிடி என்கிற கணக்கில் வழக்கை மீளப் பெற்றுக்கொண்டு திரும்பிவிட்டார்கள். மிலிலி துழிஜதீ உலிலிவவி விஸ்ரீலிஷ்யிவி மிஜூள விலிற்ஸ்ரீ (பல சமையல்காரர்கள் சேர்ந்தால் சமையல் கெட்டுவிடும்) என்று இதைத்தான் சொல்கிறார்களோ.

**இடிமின்னல்**

## தமிழ் பெண்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடியகல்வுதிணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு அவர் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார்.

அவரது கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடவுச் சீட்டுக்கான புகைப்படங்களை எடுக்கும்போது, தமிழ்ப் பெண்கள் பொட்டிடுவதும், இந்துசமய அடையாளமான விபூதி, சந்தனம் உள்ளிட்டவற்றைத் தரித்திருப்பதும் முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டுமென, அகில இலங்கை அரச உரிமை பெற்ற புகைப்படப்பிடிப்பாளர் சங்கத்தினரால், வடக்கு மாகாண புகைப்படப்பிடிப்பாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

அந்த வகையில், மேற்குறித்த அறிவிப்பானது தமிழ் மக்களின் இன, மத அடையாளங்களை வலிந்து பறிக்கும் ஓர் அடிப்படை உரிமை மீறலாக உள்ளதை தங்களின் மேலான கவனத்திற்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குறிப்பாக, தமிழர்களது மரபார்ந்த பண்பாட்டு அடையாளங்களுள் ஒன்றாகவே தமிழ்ப் பெண்கள் பொட்டிடும் பழக்கத்தை காலம்காலமாக பின்பற்றி வருகிறார்கள். ஓர் இனத்தின் உணர்வு நிலையோடு ஒன்றித்துப் போயுள்ள இயல்பான வாழ்வியல் விடயங்களை, தார்மீக காரணங்கள் எவையுமற்று தடுக்க நினைப்பதும், அதுசார்ந்த செயற்பாடுகளை அதிகார ரீதியாக நடைமுறைப்படுத்துவதும் மிகமோசமான அடக்குமுறையே என்பதையும், உணர்வு நிலைசார் பண்பாட்டு அடையாளப் பறிப்பென்பது எத்தகைய தாக்கங்களை உருவாக்கக்கூடும் என்பதையும் தாங்கள் உணர்ந்துகொள்ள வேண்டுமென வலியுறுத்துகிறேன்.

குடியகல்வுத் தேவைகளின் பொருட்டு கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்ள விரும்பும் ஒரு ஈழத்தமிழர், கடவுச்சீட்டுக்கான ஒளிப்படத்தை எடுக்கும்போது தனது இனம் சார்ந்த, மதம் சார்ந்த தனித்துவ அடையாளங்களைத் துறந்தே ஆக வேண்டுமென்ற எந்தத் தேவைப்பாடும் இல்லாத நிலையில், இந்த நாட்டுப் பிரஜைகளின் அடிப்படை உரிமையை மீறும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி அறிவுறுத்தலை உடனடியாக மீளப்பெறுவதன் மூலம், தமிழ் மக்களின் தனித்துவ அடையாளங்களையும், அடிப்படை உரிமைகளையும் உறுதிசெய்யுமாறு தங்களைத் தயவுடன் கேட்டுக்கொள்கிறேன் - என்றுள்ளது.

# உள்ளாட்சி தேர்தலுக்காக மட்டுமே பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை

## அதன் பின்னர் செத்துவிடும் என்கிறது ஐ.தே.க.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை அடிப்படையாகக் கொண்டு மாத்திரமே பட்டலந்த ஆணைக்குழு விவகாரம் ஆளும்தரப்பு பெரிதுபடுத்தப்படுகிறது. தேர்தல் நிறைவடைந்ததன் பின்னர் வழமை போன்று இந்த காரணி இயற்கையாக செத்துவிடுமென ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் தலதா அத்துகோரள தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கட்டுக்கடங்காத பொய்களைக் கூறியே இந்த ஆளும்தரப்பு ஆட்சியைக் கைப்பற்றியது. அவர்கள் ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் கூறிய பெரும் பொய்களில் ஒன்றுதான் பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை.

இது தொடர்பில் நீதிமன்றத்தின் ஊடாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. 2000ஆம் ஆண்டு நாடாளுமன்றக் குழுவொன்றின் அறிக்கையூடாக இது குறித்த அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாவிட்டால் ஏனைய கட்சிகள் மீது சேறு பூசும் அரசியல் முன்னெடுக்கப்படுகிறது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை அடிப்படையாகக்கொண்டு மாத்திரமே பட்டலந்த ஆணைக்குழு விவகாரம் ஆளும்தரப்பால் பெரிதுபடுத்தப்படுகிறது. தேர்தல் நிறைவடைந்ததன் பின்னர் வழமை போன்று இந்தக் காரணி இயற்கைவே செத்துவிடும். இது தொடர்பில் முன்னெடுக்கப்படும் எந்தவொரு நடவடிக்கையையும் எதிர்கொள்ள நாம் தயாராகவே இருக்கின்றோம் - என்றார்.

## அமெரிக்க வரிப்........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்த விவகாரத்தை மிகக் கவனமாகவும் இராஜதந்திரரீதியிலும் அணுகவேண்டியுள்ளது. அந்த வகையில் இலங்கை அதன் சர்வதேசப் பங்காளிகளுடன் கைகோர்த்துச் செயல்படுவதன் மூலம், ஆளும்தரப்பு நாட்டின் பொருளாதாரத்தையும் எதிர்காலத்தையும் பாதுகாக்கும்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் சமீபத்திய வரி அறிவிப்பு, அமெரிக்காவுடன் நீண்டகால பொருளாதார உறவுகளைக் கொண்ட இலங்கை உட்பட உலகளாவிய வர்த்தகத்தில் புதிய அழுத்தங்களைச் சேர்த்துள்ளது.

இலங்கையின் கட்டணக் கட்டமைப்பு ஒரே இரவில் உருவாக்கப்பட்ட ஒன்றல்ல. அது கடந்த கால கொள்கை வழிகாட்டுதல்களால் வடிவமைக்கப்பட்ட கட்டமைப்பைப் பிரதிபலிக்கிறது. ஆனால் ஒரு ஆளும்தரப்பாக, அதை நிவர்த்தி செய்வதற்கான முழுப் பொறுப்பையும் நாம் ஏற்றுக்கொள்கிறோம்.

மக்களின் நலனை மையமாகக் கொண்டு எமது ஏற்றுமதியாளர்கள், தொழிலாளர்கள் மற்றும் தொழில்முனைவோர் உலகளாவிய சந்தைகளில் தங்கள் இடத்தைப் பெற எவ்வளவு கடினமாக உழைத்துள்ளனர் என்பதை நாம் அறிவோம். ஆளும்தரப்பு அந்த முயற்சிகளைப் பாதுகாக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்கும் என்று உறுதியளிக்கின்றோம்.

சர்வதேச பங்காளிகளுடன் கைகோர்த்து செயற்படுவதன் மூலம், எமது பொருளாதாரத்தையும் எதிர்காலத்தையும் பாதுகாப்போம். இது அச்சத்திற்கான தருணம் அல்ல. அவதானத்துடன் செயற்படுதற்கான தருணமாகும். இவ்வாறான நெருக்கடிகளின்போது இலங்கை அமைதியாகவும், நம்பிக்கையுடனும், ஒற்றுமையுடனும் முன்னேறும் என்றுள்ளது.

## அமெ. வரி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறிய பொருளாதாரத்தைக் கொண்ட இலங்கையைப் போன்ற நாடுகள் பெருமளவு வரியால் எதிர்கொள்ளும் பொருளாதார சவால்கள் குறித்தும் இங்கு விரிவாக ஆராயப்பட்டது.

ஏற்பட்டிருக்கும் நிலை தொடர்பில், ஒரு நாடு என்ற வகையில் எவ்வாறு செயற்படுவது என்று அலசப்பட்டதுடன் நிலைமையை எதிர்கொள்வதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் துமிந்த ஓஹலங்கமுவ, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, வர்த்தக அமைச்சின் செயலாளர் விமலேந்திராஜா, ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தலைவர் மங்கள விஜேசிங்க, அயலுறவு அமைச்சின் பொருளாதார அலுவல்கள் பணிப்பாளர் நாயகம் தர்ஷன பெரேரா, இலங்கை வணிகச் சபையின் தலைமை பொருளாதார கொள்கை ஆலோசகர் ஷிரான் பெர்னாண்டோ, பிராண்டிக்ஸ் குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி அஷ்ரப் ஓமர், மாஸ் ஹோல்டிங்ஸ் இணை நிறுவனர் ஷெராட் அமலீன், லங்கா காமண்ட் முகாமைத்துவ பணிப்பாளர் சைப் ஜெபர்ஜி, மிஷேல் லங்கா நிறுவனத்தை பிரதிநிதித்துவப்படுத்தி நிலந்தி வெலிவே மற்றும் குழுவின் ஏனைய உறுப்பினர்களும் இதில் கலந்துகொண்டனர்.

தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான அனில் ஜயந்த பெர்னாண்டோ, நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் ஹர்ஷன சூரியப்பெரும ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர்.

## இன்று மாலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியப் பிரதமருக்கான உத்தியோகபூர்வ வரவேற்பு நிகழ்வு ஏப்ரல் 5 சனிக்கிழமை காலை கொழும்பில் உள்ள சுதந்திர சதுக்கத்தில் நடைபெறும்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுடன் இருதரப்பு பேச்சு நடத்துவார். இருதரப்பு பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்புக்களும் திட்டமிடப்பட்டுள்ளன.

இதன்போது எரிசக்தி, டிஜிட்டல் மயமாக்கல், பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் ஆகிய துறைகளில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் இந்தியாவுடனான கடன் மறுசீரமைப்பு தொடர்பான ஒப்பந்தங்கள் ஆகியவை பரிமாறிக்கொள்ளப்படும்.

இந்திய ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படும் சம்பூர் சூரிய மின் உற்பத்தி நிலையத் திட்டம் ஆரம்பிப்பு, வெப்பநிலை மற்றும் ஈரப்பதத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய 5,000 மெட்ரிக் தொன் தம்புள்ள களஞ்சிய வளாகத்தின் நிர்மானம் (குளிர்பதன திட்டம்), 5,000 மதத் தலங்களின் கூரைகளில் சூரிய மின்களங்களை நிறுவும் திட்டம் என்பன நரேந்திர மோடி நிகழ்நிலை ஊடாக ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

அதேபோல், இந்திய பிரதமர் அனுராதபுரம் ஸ்ரீ மகா போதிக்கு வழிபாடு மேற்கொள்ளவிருப்பதுடன் இந்திய அரசின் அன்பளிப்புடன் நிறுவப்பட்ட மஹவ-அனுராதபுரம் தொடருந்து சமிக்ஞை கட்டமைப்பு மற்றும் மறுசீரமைக்கப்பட்ட தொடருந்துப் பாதையை திறந்துவைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

ஏப்ரல் 06 பிற்பகல் இலங்கைக்கான சுற்றுப்பயணத்தை நிறைவு செய்துகொண்டு இந்தியப் பிரதமர் நாட்டிலிருந்து புறப்பட்டுச் செல்வார்

# ரணில் விக்கிரமசிங்க போன்றவர்களின் அனுசரணை ஊடாகத்தான் பட்டலந்த வதைமுகாம் உருவாக்கம்

## பிரபு எம்.பி. சாட்டை

பட்டலந்த வதைமுகம் கடந்த காலங்களில் இலங்கை அரசியல் வரலாற்றிலும்சரி, இலங்கை வரலாற்றிலும்சரி, ஒரு கறை படிந்த ஒரு நாள்களாக அதனைக் கருத முடியும். அந்தக் காலப்பகுதியில் இந்த நாட்டை நிர்வகித்திருந்த ரணில் விக்கிரமசிங்க போன்றவர்களின் அனுசரணையின் ஊடாகத்தான் இந்த பட்;லந்த வதை முகாம் உருவாக்கப்பட்டிருந்தது என தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுபற்றுப் பிரதேச உள்ளூராட்சிசபை தேர்தல் பரைப்புரைக் கூட்டம் செவ்வாய்கிழமை தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும்பிரதேசஅபிவிருத்திக்குழுத்தலைவர் கந்தசாமி பிரபு தலைமையில் திருப்பமுகாமம் வெள்ளிமலை பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இன்போதுபிரதேசவேட்பாளர்கள், கட்சியின் முக்கியஸ்தர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் -



வருகின்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பெரும்பாலான உள்ளூராட்சி சபைகளை தேசிய மக்கள் சக்திதான் ஆட்சி அமைக்கும். ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருக்கின்ற காலத்தில் இந்தத் தேர்தலை நடத்த முடியாது எனக் கூறி இந்த இத்தேர்தலை தள்ளிப் போட்டிருந்தார். எமது அரசாங்கம் முதலாவது கன்னி வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்ததன் பின்னர் அந்த வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்குரியநிதி ஒதுக்கீட்டை மேற்கொண்டு இருந்தோம்.

அந்த அடிப்படையில் வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு தேர்தலுக்கான திகதியும் குறிக்கப்பட்டிருக்கின்றது. இந்த தேர்தலில் பெருவாரியான வாக்குகளை திசைகாட்டி பெற்றுக் கொள்ளும்.

ஜனாதிபதியின் மீதும், தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் மீதும், மக்கள் இன்னும் நம்பிக்கை வைத்திருக்கின்றார்கள். இந்த நாட்டிலே புரையோடிப் போயிருக்கின்ற அரசியல் கலாசாரத்தை நாங்கள் மாற்றி இருக்கின்றோம். குற்றவாளிகள் தற்போதுதண்டனைகளைப்பெற்று அதற்குரிய நடவடிக்கைகளை அரசாங்கம் என்ற ரீதியில் நாங்கள் மேற்கொண்டிருக்கின்றோம் .அரசியல் பழிவாங்கல்களைக் கடந்து சுயாதீனமாக சரியான சட்டவாக்கத்தின் ஊடாக நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு கொண்டிருக்கின்றன.

மக்கள்மீது அதிகரித்த நம்பிக்கை தேசிய மக்கள் சக்தி மீண்டும் மீண்டும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. அதனூடாக இந்த உள்ளூராட்சி மன்றதேர்தலில்கூட தேசியமக்கள் சக்தி பெருவாரியானசபைகளை கைப்பற்றி வெற்றிகளை நாங்கள் கொண்டாடக் காத்திருக்கின்றோம்.

பட்டலந்த வதைமுகம் கடந்த காலங்களில் இலங்கை அரசியல் வரலாற்றிலும்சரி, இலங்கை வரலாற்றிலும்சரி, ஒரு கறை படிந்த ஒரு நாள்களாக அதனைக் கருத முடியும். அந்த காலப்பகுதியில் இந்த நாட்டை நிர்வகித்திருந்த ரணில் விக்கிரமசிங்க போன்றவர்களின் அனுசரணையின் ஊடாகத்தான் இந்த பட்டலந்த வதை முகாம் உருவாக்கப்பட்டிருந்தது. அதனூடாக பல இளைஞர்கள் அவர்களின் வாழ்வியல் இல்லாமல், செயற்பட்டிருந்தது. அங்கு மனித உரிமைகள் மீறப்பட்டிருக்கின்றன. அது தொடர்பான விசாரணை முன்னெடுக்கப்பட்டிருந்தது, அறிக்கைகள் வெளியிடப்பட்டிருந்தன, ஆனாலும் சரியான முறையில்அது அடுத்தகட்டத்திற்குசட்டரீதியான முறையில் மேற்கொள்ளாமல் கடந்த கால அரசாங்கம் தள்ளிப் போட்டிருந்தன.

இன்று தேசிய மக்கள் மத்திய அரசாங்கம் அதை நாடாளுமன்றத்தில் விவாதத்திற்காக முன்மொழிந்து இருக்கிறது. எதிர்வரும் காங்களில் அதன்விவாதம்நடைபெறஇருக்கின்றது. இதுதான் இலங்கையின் வரலாற்றில் உருவாக்கப்பட்ட முதலாவது வதைமுகாம் அதன் பின்னர்தான் பல வதை முகாம்களை இலங்கை பூராகவும் உருவாக்கப்பட்டு அதனூடாக பல இளைஞர் யுவாதிகள்சித்திரவதை செய்யப்பட்டிருந்தார்கள். பலர் காணாமலாக்கப்பட்டிருந்தார்கள், அவர்களுடைய உரிமைகள் பறிக்கப்பட்டிருந்தன, உயிர்களும் பறிக்கப்பட்டன, அனைத்தும் இழந்த நிலையில்தான் காணப்பட்டிருந்தன.

ஆகவே அனைத்து விடயங்கள் சம்பந்தமாகவும் அரசாங்கம் என்ற ரீதியில் நாங்கள் கரிசனை கொள்கின்றோம். அதனூடாக இந்த நாட்டுக்கு நீதியான நேர்மையான அரசியல் நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொள்வோம். இந்த நாட்டு மக்கள் அனைவருக்கும் நீதியை நாங்கள் வெளிக்கொணர்வோம்.

கிழக்கில் எந்த வகையான கூட்டமைப்புக்கள் உருவாகினாலும் இன்று அவர்கள் மக்களால் நிராகரிக்கப்பட்டு வீடுகளுக்கு அனுப்பப்பட்டவர்கள். அவர்கள் எப்படிப்பட்ட கூட்டமைப்புகளை உருவாக்கினாலும்கூட அவர்களால் இந்த ஒரு தேர்தலை எதிர்கொண்டாலும் அவர்களால் வெற்றிபெற முடியாது.

மக்கள் அவர்களை ஏற்கனவே நிராகரித்திருந்த நிலையில் இன்னும் அவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்க மாட்டார்கள். அவர்களின் செயற்பாடுகள் தொடர்பாகவும் மக்கள் மிகத் தெளிவாக எமது மாவட்ட மக்கள் சிறந்த அறிவோடு அவர்களை அணுகுவார்கள். இந்த தேர்தலிலும்கூட அவர்கள் அதன் பிரதிபலங்களை பார்க்கக்கூடியதாக இருக்கும். - என அவர் இதன்போது தெரிவித்தார்.



# பார்மசி உரிமையாளர்களுடன் நல்லெண்ண கலந்துரையாடல்

## கிண்ணியாவில் நடந்தது

(றிஸ்னாத்)



கிண்ணியாசுகாதார வைத்திய அதிகாரி அஜித் அவர்களின் தலைமையில் அலுவலக கேட்போர் கூடத்தில் புதன்கிழமை கிண்ணியா பார்மசி உரிமையாளர்களுடன் நல்லெண்ண கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது .

இதில் சில முக்கியமான தீர்மானங்கள் முன்னெடுத்துச்செல்ல முடிவு செய்யப்பட்டது. பார்மசி பதிவு செய்யப்பட்டதை உறுதிப்படுத்தல் மற்றும் பார்மசியின் வெப்ப நிலையை முகாமைத்துவம் செய்தல்,

பார்மசியில் தொடந்து ஒரு பார்மசிஸ்ட் இருத்தல், அத்தோடு வைத்தியரின் மருத்துவ பற்றுச்சீட்டு இன்றி மருந்துப் பொருள்கள் விற்பனை செய்வது தடை செய்வதோடு,

கிண்ணியா மக்களின் நலனுக்காக தொடார்ந்தும் தரமான மருந்துப் பொருள்களை விற்பனை செய்தல் என்பன தீர்மானங்களாக எடுக்கப்பட்டன.

இந்தத் தீர்மானங்களை எதிர்வரும் காலங்களில் சுகாதார வைத்திய அதிகாரியால் பார்வையிட்டு உறுதிப்படுத்துப்படும் என குறித்த பார்மசி உரிமையாளர்களிடம் அறிவுறுத்துப்பட்டது.



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அமெரிக்க வரி; வரவிருக்கும் நெருக்கடிகள்

**இலங்கை ஏற்றுமதிகள் மீது 44% வரி விதிப்பதாக அமெரிக்கா அறிவித்துள்ளது, இவ்வளவு உயர்வான வரி விகிதம் இலங்கையின் பொருளாதார மற்றும் அரசியல் வட்டாரங்களில் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ளது. வாஷிங்டனின் 'பரஸ்பர வரிகள்' என்ற பரந்த கொள்கையின் ஒரு பகுதியாக இருக்கும் இந்த நடவடிக்கை, ஏற்கனவே பலவீனமாக உள்ள இலங்கையின் பொருளாதாரத்தை மிக மோசமாகப் பாதிக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது, இதனால் தைத்த ஆடைத் துறை மட்டுமன்றி ஒட்டுமொத்த ஏற்றுமதி வருவாய் கடுமையாகப் பாதிக்கப்படுகிறது.**

**இலங்கை தனது பொருளாதார மீட்சிக்கு, மறுமலர்ச்சிக்கு ஏற்றுமதித் துறையையே பெரிதும் நம்பியுள்ளது, அதில் அமெரிக்கா ஒரு மிக முக்கிய வர்த்தகப் பங்காளியாக உள்ளது, குறிப்பாக தைத்த ஆடை மற்றும் கடலுணவு, தேயிலை உள்ளிட்ட உணவுப் பொருட்கள் அமெரிக்காவுக்கே அதிகளவில் ஏற்றுமதியாகின்றன. 2023 ஆம் ஆண்டில், இலங்கை அமெரிக்காவிற்கு சுமார் 3 பில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள பொருட்களை ஏற்றுமதி செய்தது,**

**புதிய வரி இந்தத் தொழில்களுக்கு கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது, இது தொற்றுநோய்க்குப் பிந்தைய பொருளாதார மீட்சியுடன் ஏற்கனவே போராடி வரும் ஒரு நாட்டில் அந்நிய செலாவணி வருவாய் குறைவதற்கும் வேலை இழப்புகளுக்கும் வழிவகுக்கும். வர்த்தக செலவுகளில் ஏற்படும் இந்தத் திடீர் அதிகரிப்பு இலங்கையின் பொருட்களை போட்டியற்றதாக மாற்றக்கூடும், இது ஏற்றுமதியில் கடுமையான சரிவுக்கு வழிவகுக்கும் என்று நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.**

**இலங்கை ஆளும்தரப்பு சூழ்நிலையின் தீவிரத்தை ஒப்புக் கொண்டுள்ளது. இது பற்றி ஆராய்வதற்காக அரசுத் தலைவர் உடனடியாக ஒரு குழுவை நியமித்துள்ளார். அந்தக் குழுவுடன் அவர் நேற்று கலந்தாய்வும் நடத்தியுள்ளார். அமெரிக்காவின் வரியை மறுபரிசீலனை செய்வதற்கான பேச்சுகளுக்கு இராஜதந்திர முயற்சிகள் தீவிரப்படுத்தப்படுகின்றன என்று அமைச்சர்கள் கூறுகிறார்கள். சிறப்பு வர்த்தக ஒப்பந்தங்களின் கீழ் விலக்குகள் அல்லது குறைப்புகளைப் பெற அமெரிக்க வர்த்தக பிரதிநிதிகளுடன் சாத்தியமான பேச்சு நடத்தப்படும் என்று அயலுறவு அமைச்சக அதிகாரிகள் சூசகமாக தெரிவித்துள்ளனர். கூடுதலாக, சாத்தியமான இழப்புகளை ஈடுசெய்ய ஐரோப்பிய ஒன்றியம், இந்தியா மற்றும் சீனாவுடன் வர்த்தக கூட்டாண்மைகளை விரிவுபடுத்துவது உட்பட மாற்று சந்தைகள் குறித்தும் ஆளும்தரப்பு ஆராய்ந்து வருகிறது. ஆனால் இந்த மாற்று ஏற்பாடுகளால் இழப்புக்களை உடனடியாகச் சமாளிக்க முடியாது.**

**இதற்கிடையில், பாதிக்கப்பட்ட வணிகங்களை ஆதரிப்பதற்காக ஏற்றுமதிச் சலுகைகள் மற்றும் வரி நிவாரண நடவடிக்கைகளை மீண்டும் தொடங்குவது குறித்து உள்ளூர் கொள்கை வகுப்பாளர்கள் பரிசீலித்து வருகின்றனர். ஏற்றுமதியாளர்களுக்கு தற்காலிக ஆதரவு மானியம் மற்றும் உள்நாட்டு தொழில்களில் அதிகரித்த முதலீடு ஆகியவை குறித்தும் ஆளும்தரப்புச் சிந்திக்கலாம்.**

**ஆளும்தரப்பு நிலைமையைக் கையாளும் விதம் குறித்து எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சனங்களை முன்வைத்துள்ளன. இந்த நிலை வரும் என்று ஏற்கனவே எச்சரிக்கப்பட்டபோதும் ஆளும்தரப்பு அதைச் சரிவர எதிர்கொள்ளவில்லை என்று அவை திட்டுகின்றன. பிரதான எதிர்க்கட்சித் தலைவர் சஜித், ஆளும்தரப்பு வர்த்தக உறவுகளை பன்முகப்படுத்தத் தவறிவிட்டதாகவும், மேற்கத்திய சந்தைகளை அதிகமாக நம்பியிருப்பதாகவும் குற்றம் சாட்டினார். 'இந்த நெருக்கடி நீண்ட காலமாக உருவாகி வந்தது' என்பதை அவர் சுட்டிக்காட்டினார். 'ஆசிய பொருளாதாரங்களுடன் வலுவான வர்த்தக உறவுகளை வளர்த்துக் கொள்வதை அடுத்தடுத்த ஆளும்தரப்புக்கள் புறக்கணித்துள்ளன, இதனால் நாம் பொருளாதார அச்சுறுத்தலுக்கு ஆளாக நேரிடுகிறது' என்கிறார் அவர்.**

**இந்த விடயம் குறித்து விவாதிக்க அவசர நாடாளுமன்றக் கூட்டத்திற்கு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அழைப்பு விடுத்துள்ளனர், அமெரிக்காவுடனான பேச்சுக்களில் ஆளும்தரப்பு வெளிப்படையாக இருக்கவேண்டும் என்றும் தெளிவான அவசரத் திட்டத்தை முன்வைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர். சில உறுப்பினர்கள், அமெரிக்க வர்த்தகத்தில் இலங்கை சார்ந்திருப்பதைக் குறைக்க சார்க் மற்றும் ஆசியான் நாடுகளுடன் பிராந்திய வர்த்தக ஒப்பந்தங்களை வலுப்படுத்த வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளனர்.**

**அமெரிக்க வரி மறுக்க முடியாத சவாலை முன்வைக்கும் அதேவேளையில், அதன் தாக்கத்தைக் குறைக்க இலங்கை விரைவாகச் செயல்பட வேண்டும். ஏற்றுமதிகளை பன்முகப்படுத்துதல், ஒற்றை சந்தைகளைச் சார்ந்திருப்பதைக் குறைத்தல் மற்றும் உள்நாட்டு உற்பத்தியை வலுப்படுத்துதல் ஆகியவை தேசிய முன்னுரிமைகளாக இருக்கவேண்டும். பாரம்பரிய மற்றும் வளர்ந்து வரும் வர்த்தக கூட்டாளர்களுடன் இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்துவது எதிர்காலத்தில் இதேபோன்ற பாதிப்புகளைத் தவிர்க்க ஒரு நீண்டகால தீர்வாக செயல்படும். அதற்கு உறுதியான, தீர்க்கமான பார்வையுள்ள அரசியல் தலைமை வேண்டும்.**

# வாதம், விதண்டா வாதம்

என். சத்தியமூர்த்தி

மூன்று நாள் பயணமாக இன்று இலங்கைக்கு வரும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி, தலைநகர் கொழும்புவில் தமிழ் அரசியல் தலைவர்களையும் சந்திப்பார் என்று தென்னிலங்கை செய்திகள் தெரிவிக்கின்றன. அது போன்றே, மலையக தமிழ் தலைவர்களையும் அவர் சந்திப்பார்.



முன்பொருகாலத்தில் இருந்தது போல், இலங்கை விஜயம் செய்யும் இந்திய அரசு தலை வர்கள், தமிழர் தலைவர்களை தனிதனியான குழுக்களாக இப்போதெல்லாம் சந்திப்பதில்லை. மாறாக, வடக்கு கிழக்கு வாழ் தமிழ் தலைவர்களை ஒரே குழுவாகவே சந்திக்கிறார்கள். என்ன, இந்திய தலைவர்கள், ஒரு காலத்தில் விடுதலை புலிகள் அமைப்பை ஆதரித்த தமிழ் தலைவர்கள், அல்லது அரசிற்கு எதிரான பிற தமிழ் தலைமைகளை மட்டுமே சந்தித்து வந்துள்ளனர். அவ்வப்போது அரசில் பங்குபெற்ற அல்லது அரசிற்கு ஆதரவளித்து வந்த தலைவர்களை ஏனோ சந்தித்தது இல்லை.

தற்போது, ஜேவிபி-- என்பிபி அரசு அமைந்தது முதல் முன்பு 'அரசு ஆதரவாக' இருந்த தமிழ் தலைமைகள் கூட தற்போது எதிரணியிலேயே இருக்கின்றன. என்றாலும், இந்தியா தனது வழமையான அணுகுமுறையை மாற்றிக்கொள்ளவில்லை. என்றாலும், தமிழர் தரப்புகளுடன் அதிக நேரம் செலவிட்டு வந்த இந்திய அரசியல் தலைமைகள் இப்போதெல்லாம் அவ்வாறு செய்வதில்லை என்ற கருத்து இங்குள்ள அறிவுஜீவிகளிடையே பரவி உள்ளது. அது உண்மையும்கூட. அதற்கு காரணம், இந்திய அரசு, கொழும்பில் ஆட்சி செய்யும் தென்னிலங்கை தலைமைகளுடன் நேரடியாகவே பேசி வெற்றிகரமான முன்னெடுப்புகளை செய்துர் வருவதால், தமிழர்களை 'பகடை காயாக' பயன்படுத்த வேண்டிய கட்டாயம் தோன்றவில்லை என்பது இங்குள்ள அறிவு ஜீவிகளின் வாதம், விதண்டா வாதம்.

### நம்பகதன்மை

இதற்குக்காரணம், இந்திய அரசோ, அல்லது தென்னிலங்கை சார்ந்த அரச தரப்புகளோ அல்ல. மாறாக, இனப்போர் முடிந்த கடந்த பதினைந்து ஆண்டுகளாக, பல்வேறாக பிரிந்து செயல்படும் தமிழ் அரசியல் தலைமைகள், தங்களது மக்களிடமே நம்பகத்தன்மையை இழந்ததுதான்.

இதன் காரணமாகவும், அவர்களால், பாராளுமன்ற தேர்தலில் பெரிய அளவில் வெற்றி பெறமுடியவில்லை. அதனை தொடர்ந்தே ,தாங்கள் சார்ந்த அரசியல் கட்சிகளுக்கு இருந்து வந்த வலுவான அடித்தளத்தை தாங்களாகவே தூர்த்துவிட்டார்கள்.

இன்றைய நிலைமையில், தமிழ் அரசியல் தலைமைகள், ஒன்றாகவோ, பலவாகவோ, தங்களது மக்களின் எதிர்பார்ப்புகளை எத்தனை தூரம் பிரதிபலிக்கிறார்கள் என்ற கேள்வி எழுகிறது. கடந்த இரண்டு- மூன்று ஆண்டுகள், அந்தக் கட்சிகள் தனித்தோ, சேர்ந்தோ அரங்கேற்றிய அரசிற்கு எதிரான போராட்டங்கள் தொடர்ந்து பிசுபிசுத்தே போயின.

இன்னும் சொல்லப்போனால்,கடந்த 2012ஆம் ஆண்டு, 'பொத்துவில் முதல் பொலிகண்டி வரை'யிலான கிழக்கு-வடக்கு தமிழர் அணிவகுப்பு போரட்டத்திற்கு பின்னர், இது வரை ஒரு போராட்டமும் வெற்றி பெறவில்லை. அந்த பேரணியின் வெற்றிக்கு பின்னால் இருந்த கிழக்குவாழ் தமிழர்தலைமையே, நாடாளுமன்ற தேர்தலிலும் தமிழ் அரசு கட்சியின் மானத்தையும் அனைத்து தமிழ் அரசியல் தலைமைகளின் மானத்தையும் காப்பாற்றியது.

### வறட்டு கௌரவம்

இந்தப் பின்னணியில், இந்திய பிரதமருடனான பேச்சுக்களில் தமிழர் தலைமைகள் என்ன கூற போகின்றன? முன்பு பதிமூன்றாவது திருத்தத்தை முழுமையாக செயல்படுத்த இலங்கை அரசிற்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று செல்வம் அடைக்கலநாதனின் முன்னெடுப்பில் அனைத்து தமிழர் கட்சி தலைமைகளும் பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதின.

அந்தக் கடித வரைவை சீர்திருத்தி எழுதிய காலம்சென்ற சம்மந்தன் கடைசி பத்திகளில் எங்கேயோ 'சமஷ்டி' என்ற பதத்தை நுழைத்திருந்தார். ஆனால், இந்திய பிரதமர் சார்ந்த அப்போதைய தமிழர் தரப்பு முயற்சிகள் அனைத்துமே பதிமூன்றை மையப்படுத்தியே இருந்தன என்பதே உண்மை.

அப்போது ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்கே ஆட்சியில் இருந்தார். அந்தக் காலகட்டத்திலேயே அனைத்து தமிழ் தலைமைகளும் சமஷ்டியை முன்னிறுத்திய தீர்வுதிட்டமே ஏற்புடையது என்று அறிவித்துவிட்டார்கள். அந்த நிலைமையே தற்போதும் தொடருகிறது. குறிப்பாக, அன்றும், இன்றும், என்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மட்டுமே சமஷ்டியை அடிப்படையான தீர்வுதிட்டம் என்று தெரிவிப்பதில் குறியாக இருந்தார். இதன் காரணமாகவே, பதிமூன்றை முன்னிறுத்திய இந்தியப் பிரதமருக்கான கடிதத்தில் அவர் கைசாத்திடவில்லை.

ஒரு காலத்தில் அவர் 'கூட்டமைப்பு' என்று பொருள்படும் 'கன்பெடரேஷன்' என்ற தீர்வுதிட்டத்தையே முன் வைத்திருந்தார். என்றாலும் அரசுடனான பேச்சு முயற்சிகளில், தனது பங்கிற்கும் சிறிது விட்டுக் கொடுப்பதாகக் காட்டிய அவர், அதிலிருந்து ஒரு படி கீழிறங்கி சமஷ்டித் திட்டத்தை முன்னெடுத்தார். ஆனால், கஜேந்திரகுமாரைத் தாண்டி பிற தமிழ் தலைமைகள் எல்லாம், இனப்போருக்கு பிந்தைய காலத்தில், பதிமூன்றை முன்வைத்தே தங்களது முன்னெடுப்புகளைச் செய்து வந்தன. அவர்களில் பலரும் கஜனுடன் கை கோர்க்காததற்கு கொள்கை ரீதியான இந்த வேறுபாடே முக்கிய காரணம். அத்துடன், வழக்கமாக தமிழர் தலைமைகளுக்கே உரிய வறட்டு கௌரவம் அல்லது 'ஈகோ' பிரச்சினைகளும் இருந்தன.

தற்போது, சமஷ்டித் தீர்வு கோரிக்கையில் அனைத்து தமிழ் தலைவர்களுமே குறிப்பாக கஜேந்திரகுமாரின் கருத்தோடு ஒன்றி உள்ளார்கள். அதற்காக அவரது தலைமையை அவர்கள் ஏற்கபோவது இல்லை. என்றாலும், தமிழ் அரசு கட்சி தலைமையில், எலியும்-பூனையுமாக எதிரெதிர் அணியில் நிற்கும் சிறீதரனும் சுமந்திரனும்கூட சமஷ்டி விடயத்தில் மட்டுமே ஓரணியில் நிற்கின்றனர்.

### சமஷ்டிக்கு இடமில்லை

இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர் Kalaikkathir

## வாதம், விதண்டா ...

குறித்த இந்திய நிலைபாடு

4ம் பக்கத் தொடர்ச்சி...........

எப்போதுமே பதிமூன்றை சார்ந்தே இருந்திருக்கிறது. காரணம், பதிமூன்றாவது திருத்தம் மட்டுமே, இந்தியாவின் பங்களிப்புடன் கைசாத்திடப்பட்ட ராஜீவ்- - ஜெவர்தனே ஒப்பந்தத்தினை அடிப்படையாகக்கொண்டது. அதில் சமஷ்டிக்கு இடமில்லை. எனவே, சமஷ்டி குறித்து இலங்கை அரசுடன் பேசுவதற்கு இந்திய தரப்பிற்கு எந்தவிதமான அடிப்படையும் இல்லை.

சமஷ்டி குறித்து தற்போதோ, எப்போதோ, இந்தியா பேசுமானால், இந்த அரசு என்றல்ல, கொழும்பில் ஆட்சி செய்யும் எந்த அரசும் இவ்வாறான பதிலைத்தான் முன்வைக்கும். அதற்கு பதிலடியாக கூறுவதற்கு இந்திய தரப்பிற்கு எதுவும் இருக்காது.

அதேசமயம், பதிமூன்றாவது திருத்தத்தின் அடிப்படையிலான செயல்திட்டங்களை முன்னெடுப்பதற்கு இந்தியா எப்போதும் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது. ஒரு காலகட்டத்தில் அரசுடனான பேச்சுக்களில், அப்போதைய தமிழ் தேசிய கூட்டமைப்பு பெரும்முன்னேற்றங்களை கண்டிருந்தபோது, இந்தியாவும் தனது நிலைபாட்டை, 'ஒன்றுபட்ட இலங்கையில் தமிழர்களின் நியாயமான எதிர்பர்ர்ப்புகள் அளிக்கப்படவேண்டும்' என்று மாற்றிக்கொண்டது.

அதுவே ஒரு காலகட்டத்தில் 'ஒன்று பட்ட இலங்கையில் அனைத்து தரப்பினிரின் நியாயமான எதிர்பார்ப்புகள்' என்றுகூட மாறி உருவெடுத்தது. அந்தக காலகட்டத்தில், முஸ்லீம் மற்றும் மலையக தமிழர் தரப்பினரையும் உள்ளடக்கிய 'திஸ்ஸ விதரணஅறிக்கை' அடிப்படையில் அனைத்து இனத்தவர்களுக்கும் பதிமூன்றிற்கும் அப்பால் சென்று, தீர்வுகிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது.

பின்னர், அன்றைய மகிந்த ராஜபக்ச அரசு, திஸ்ஸ விதரண அறிக்கையை குப்பையில் வீசியபோது, இந்தியாவும்,'தமிழர்களின் எதிர்பார்ப்புகள்' என்ற ஒற்றை பதத்துடன் நிறுத்திக்கொண்டது. அதுவே இந்தியாவின் தொடரும் நிலைபாடு.

### ஆச்சரியம் இல்லை

மாறுபட்ட தமிழர் அரசியல் முன்னெடுப்புகளில், பிரதமர் மோடியை சந்திக்கவிருக்கும் தமிழ் தலைவர்கள் சமஷ்டி அடிப்படையிலான தீர்வு குறித்து மட்டும் பேசுவார்களேயானால், அது குறித்து இந்தியா கருத்துச் சொல்ல முடியாது. அதன் அடிப்படையில் இலங்கை அரச தரப்பினருடனும் தீர்வுத் திட்டம் குறித்த பேச்சுக்களை முன்னெடுக்கமுடியாது.

சமஷ்டியை ஒட்டிய பிரச்சினை இல்லாமலே, ஜனாதிபதி அனுரஅரசு, இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் குறித்து இந்தியாவைக் கலந்தாலோசிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று தொடர்ந்து கூறி வருகிறது. அண்மையில் யாழ்பாணம் வந்திருந்த போக்குவரத்துதுறை அமைச்சர் பிமல் ரத்னாயக்க, இனப்பிரச்சினைக்கானதீர்வுதிட்டம் பிரதமர் நரேந்திர மோடியுடனான பேச்சுக்கான நிகழ்சிநிரலில் இடம் பெறவில்லை என்று கூறி சென்றிருக்கிறார்.

போதாததற்கு, இந்தியாவுடனான பேச்சுளில் பதிமூன்றாவது திருத்த அமலாக்கம் குறித்து அரசு பேசக்கூடாது என்று பொதுஜன பெரமுன கட்சி கூறி உள்ளது. ஏன், பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை மாகாணங்களுக்கு அளிக்கக்கூடாது என்றும் அந்தக் கட்சி அறிவித்துள்ளது. அரசியல் ரீதியாக இத்தகைய நிலைபாட்டை எடுத்து வந்துள்ள ஜேவிபி இப்போது ஆட்சியில் இருப்பதால், அதே வாக்குவங்கியை குறிவைக்கும் பெரமுன இவ்வாறு கூறுவதில் ஆச்சரியம் இல்லை.

இதனால் மட்டும், மோடி, இது குறித்து ஜனாதிபதி அனுரவுடன் இந்தியாவின் நிலைபாட்டை முன் வைக்கமாட்டார் என்று கூறி விடமுடியாது. ஆனால், இந்தியாவிற்கு சம்மந்தமில்லாத சமஷ்டி சார்ந்த தீர்வு திட்டம் குறித்து அவர் அனுரவுடன் பேச முற்பட்டால், அது முற்றிலும் ராஜதந்திரமற்ற முன்னெடுப்பாகவே முடியும்.

### இப்போது இல்லை?

இல்லையென்று சொல்லாமல், வடக்கு மற்றும் கிழக்கு உள்ளிட்ட அனைத்து மாகாண சபைகளுக்கும் காலவரையறை இன்றி பிற்போடப்பட்ட தேர்தல்களை உடனடியாகவே நடத்தி, மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட தலைவர்களிடம் ஆட்சி அமைப்பை ஒப்படைக்க வேண்டும் என்று இந்தியா அழுத்தம் கொடுக்கலாம். காரணம், குறிப்பாக தமிழர் பகுதிகளில் மாகாண சபை என்பது, இந்திய-இலங்கை ஒப்பந்தந்தின் அடிப்படையில், பதிமூன்றாவது திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஆனால், அடுத்தடுத்து ஜனாதிபதி தேர்தல், நாடாளுமன்ற தேர்தல் மற்றும் மே 6இ-ல் உள்ளாட்சி தேர்தல் ஆகிய மூன்றையும் நடத்தி முடித்த பின்னர், இந்த ஆண்டே மாகாண சபை தேர்தல்களையும் நடத்தப் போவதில்லை என்று அமைச்சர் நளிந்த ஜயதிச்ச கூறி உள்ளர். இது குறித்து இந்திய பிரதமரிடம் தமிழர் தலைவர்கள் தங்களது கவலையை தெரிவிப்பார்ககள் என்று எதிர்பார்க்கலாம்.

காரணம், இவ்வாறு, காசு பெறாத காரணங்களை கூறியே கடந்த நான்கு ஜனாதிபதிகள், மாகாண சபை தேர்தல்களை பின் தள்ளிப்போட்டு, நாட்டின் ஜனநாயக அடிப்படையையே ஆட்டம் காண வைத்து விட்டார்கள். இதில், இந்த பிராந்தியத்திலேயே தேர்தல் ஜனநாயகத்தை முன்னெடுத்து முதல் நாடு என்ற தற்பெருமை வேறு.

இப்போது, மாகாண சபை தேர்தலை இந்த வருடம் இல்லை என்று அரச தரப்பு கூறுமேயானால், அதன் காரணமாகவும் எதிர்வரும் உள்ளாட்சி தேர்தலில் வெற்றி பெறுவோம் என்று ஆளும் தரப்பிற்கு நம்பிக்கை இல்லை என்ற கருத்துரு வலுப்பெறும். அதுவும்கூட, உள்ளாட்சி தேர்தலில் அவர்களுக்கு பாதகமாகவே அமையும்.

# அடுத்த நாடாளுமன்ற அமர்வில் என்ன நடக்கப் போகின்றது?

## ஊடகங்களுக்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் தெரிவிப்பு

பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனை அந்தப் பதவியில் இருந்து நீக்குவது தொடர்பான குழுவை நியமிப்பது பற்றியும், பட்டலந்தை வதை முகாம் பற்றிய விவாதம் தொடர்பாகவும் அத்துடன் ,அடுத்த வாரம் 8 ஆம், 9 ஆம் ,10 ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படும் ஏனைய விடயங்கள் பற்றியும் சபாநாயகர் தலைமையில் நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழுக் கூட்டத்தில் புதன்கிழமை மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் பற்றி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் நாடாளுமன்ற கட்டிடத் தொகுதியிருந்து வெளியாகும் போது ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்தார்.

எதிர்வரும் ஏப்ரல் 8 ஆம் திகதி குற்றங்களுடன் தொடர்புடைய சொத்துக்களை சுவீகரிப்பது பற்றிய சட்டமூலம் விவாதிக்கப்படுவதோடு, தற்பொழுது விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனை அந்தப் பதவியில் இருந்து நீக்குவது தொடர்பாக குழுஒன்றைநியமிப்பதுபற்றியபிரேரணை அன்றைய தினம் முன்வைக்கப்பட இருக்கிறது.இந்தவிவகாரம்நீதிமன்றத்தில் இருக்கின்றபடியால்அதற்குநாடாளுமன்ற நிலையியற் கட்டளைகளின்படி சில தடைகள் இருந்த போதிலும், சபாநாயகர் அதற்கு மாற்றீடாக ஒரு தீர்மானத்தை எடுத்து அவராக முன்வைப்பது பற்றி ஆலோசிக்கப்பட்டது . ஆனால், அவ்வாறன்றி அதை அரசாங்கத் தரப்பாலேயே அன்றைய தினம் முன்வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

9ஆம் திகதி வரி அறவீட்டு திருத்தச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் முன் வைக்கப்பட உள்ளது.

10 ஆம் திகதி பட்டலந்தை வதை முகாம் தொடர்பான விவாதம் நாடாளுமன்றத்தில் நடைபெறும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த தகவல்களை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் தெரிவித்தார் .

ஏப்ரல் 8 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் பதில் பொலிஸ் மா அதிபரை அதிலிருந்து நீக்குவது தொடர்பில் விவாதிக்கப்படுமா என்று ஊடகவியலாளர் ஒருவர் கேட்டதற்கு, விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது .ஆனால் அன்று 8 ஆம் திகதி பிற்பகல் 5.30 மணியளவில் அது நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும் என்று கூறினார்.

# வறுமை, பெற்றோர் மறுமணம் ஆகியவற்றினால் இல்லங்களை நாடும் சிறுவர் எண்ணிக்கை உயர்வு

## வடக்கு ஆளுநர் வேதநாயகன் யுனிசெப் பிரதிநிதிகளிடம் சுட்டிக்காட்டு



வறுமை, பெற்றோர் மறுமணம் ஆகியவற்றால் சிறுவர் இல்லங்களில் சேர்ப்பதற்காக அனுமதிகோரும் சிறுவர்களின் எண்ணிக்கை வடக்கில் அதிகரித்துச் செல்வதாகவும், இதுபுதியதொரு சவாலாக மாறியுள்ளதாகவும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் யுனிசெப் பிரதிநிதிகளிடம் சுட்டிக்காட்டினார்.

வடக்கு மாகாணத்துக்கு வருகை தந்து கள நிலைமைகளை ஆய்வு செய்யும் யுனிசெப் அமைப்பின் பிரதிநிதிகள் குழு வடக்கு மாகாண ஆளுநரை, ஆளுநர் செயலகத்தில் புதன்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது ஆளுநரிடம், யுனிசெப் அமைப்பு முன்னெடுத்துள்ள திட்டங்கள் தொடர்பாகவும் தமது கள நிலைமை ஆய்வு தொடர்பாகவும் விளக்கமளித்தனர்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த ஆளுநர் –

1991ஆம் ஆண்டு உதவி அரசாங்க அதிபராக தான் பதவியேற்ற காலத்திலிருந்து யுனிசெப் அமைப்பு பல்வேறு வகையான உதவிகளை எமது மக்களுக்குச் செய்து வருகின்றது. அதற்கான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வடக்கில் சிறுவர் துஷ்பிரயோகம், இளவயது கர்ப்பம் என்பன முன்னைய காலங்களுடன் ஒப்பிடுகையில் அதிகரித்துள்ளன. மேலும், வடக்கு மாகாணம் தற்போது புதிய சவால்களை எதிர்கொண்டு வருகின்றது. பாடசாலை இடைவிலகல்கள் அதிகரித்துள்ளன. சிறுவர் இல்லங்களுக்கு சிறுவர்களை சேர்க்கும் போக்கு அதிகரித்துச் செல்கின்றது. இதற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

பொருளாதாரப் பாதிப்பால் ஏற்பட்ட வறுமை நிலைமை ஒரு காரணமாக உள்ளபோதும், பெற்றோர் மறுமணம் செய்வதால்தான் பெரியளவு பாதிப்பு ஏற்படுகின்றது.

சிறுவர் இல்லங்களில் சிறுவர்களை இணைப்பதை ஊக்குவிக்கவேண்டாம் என அரசாங்கம் அறிவுறுத்தியுள்ளது. ஆனால் சிறுவர் இல்லங்களை நோக்கி வருபவர்களை இணைக்காமல்விட்டாலும், பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்பு இருக்கின்றது.

குறிப்பாக சிறுவர் துஷ்பிரயோகத்துக்கான சந்தர்ப்பங்கள் அதிகமாக இருக்கின்றன. எனவே இது எமக்கு சிக்கலான நிலைமையாக உள்ளது எனவும் ஆளுநர் சுட்டிக்காட்டிக்காட்டினார்.

இதேவேளை, மனநல பாதிப்புக்குள்ளாகும் சிறுவர்களைப் பராமரிப்பதற்கான, தங்க வைப்பதற்கான அரச இல்லங்கள் இல்லை என்று வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை திணைக்கள ஆணையாளர் திருமதி சுஜீவா சிவதாஸ் சுட்டிக்காட்டினார்.

இந்தச் சந்திப்பில் யுனிசெப்பின் சிறுவர் பாதுகாப்பு தலைமை அதிகாரி ரியோனா அஸ்லான்சிவிலுடன் சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகளும் பங்கேற்றனர்.

113

# சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் கண்புரை அறுவைச் சிகிச்சை மீள ஆரம்பம்

(நூருல் ஹுதா உமர்)

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் கண்புரை அறுவை சிகிச்சை மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது. புதிதாக நியமனம் பெற்ற கண் சத்திர சிகிச்சை வைத்திய நிபுணரால் சத்திர சிகிச்சைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் கண் சத்திர சிகிச்சை வைத்திய நிபுணராக கடமையாற்றிய டாக்டர் எஸ்.டீ.டீ.சன்ட்ரூவான் இடமாற்றம் பெற்றுச் சென்றதையடுத்து கண்புரை அறுவைச் சிகிச்சை நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தன.

இதையடுத்து கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸதீன் மேற்கொண்ட முயற்சியின் காரணமாக தற்பொழுது கண் சத்திர சிகிச்சை வைத்திய நிபுணராக நியமனம் பெற்ற டாக்டர் என்.டபள்யூ. அரவிந்தால் இந்த சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கண் சத்திர சிகிச்சை வைத்திய நிபுணர் அரவிந்தால் புதன்கிழமை முதலாவது கண்புரை அறுவை சிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. குறித்த சத்திர சிகிச்சையினை மீள ஆரம்பிப்பதற்கும் அந்த சேவையை மேம்படுத்தி பொதுமக்களுக்கு சிறந்த சேவையினை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் தேவையான மருத்துவ உபகரணங்களும் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு வழங்கி வைக்கப்பட்டன.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் உத்தரவிற்கமைவாக உயிரியல் மருத்துவ பொறியியலாளர் எம்.இப்ஹாம் துரிதமாக செயற்பட்டு குறித்த மருத்துவ உபகரணங்களை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# வயது குறைந்த நடுவராக இலங்கையர் தெரிவானார்

(பாறுக் ஷிஹான்)



கத்தார் கிரிக்கெட் கட்டுபாட்டுசபையால் ஏற்பாடுசெய்யப்பட்ட ரி10 ரமலான் வெற்றி கிண்ண இறுதிப் போட்டியின் நடுவராக இலங்கை சார்பாக அபூபக்கர் முஹம்மட் றிலாஸ் வயது குறைந்த நடுவராக கடமையாற்ற தெரிவு செய்யபட்டுள்ளார்.

கத்தார் ஆசியா ரூனமன்ட் சர்வதேச கிரிக்கெட் மைதானதில் இரவு போட்டியாக இடம்பெற்ற இத்தொடரில் கட்டார் கிரிக்கெட் சபையில் பதிவு செய்யப்பட்ட 14 மிக பலம் பொருந்திய முன்னணி கழகங்கள் போட்டிபோட்டு தங்களது திறமையை வெளிக்காட்டி இருந்தன. இத் தொடரில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நாட்டினை சேர்ந்த பல முன்னணி வீரர்கள் கலந்து கொண்டனர்.

இத் தொடரில் மொத்தமாக 49 போட்டிகளுக்காக 22 சிறந்த நடுவர்கள் கடமையாற்றினர். இவர்கள் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை மற்றும் பங்களாதேஷ் நாட்டினை பிரதிநிதித்துவப்படுத்தி கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இப்போட்டியில் இலங்கை சார்பாக கலந்து கொண்ட ஒரே ஒரு நடுவர் என்பதுடன், இளம் வயது நடுவர் என்பதும் குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும்.

இவர் சிறப்பான முடிவுகளையும், சிறந்த தீர்ப்புகளையும் வழங்கியதன் காரணத்தால் லீக் போட்டிகள், காலிறுத்திப் போட்டிகள், அரையிருத்திப் போட்டி மற்றும் இறுதிப் போட்டிகளுக்குமான மிக முக்கியமான போட்டிகளுக்கு நடுவராக கடமையாற்றினார் என்பதும் சிறப்பம்சமாகும். இவ் இறுதிப் போட்டிக்கு இவருடன் இணைந்து பாக்கிஸ்தான் நாட்டினை சேர்ந்த நடுவரும் இணைந்து கடமையாட்டினார். இப்போட்டிகள் அனைத்தும் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டுள்ளன.

இவ் இறுதிப் போட்டிக்கு பிரதம அதிதியாக கத்தார் கரிக்கெட் வாரிய செயலாளர் அவர்களுடன் மிக முக்கிய அதிதிகள் கலந்து கொண்டு, வெற்றி பெற்ற வீரர்களுக்கு விருதுக்களையும் வழங்கிவைத்தனர்.

இத் தொடருக்கு கட்டார் நாட்டின் பிரபல நிறுவங்கள் அனுசரணை பிரதான அனுசரணை வழங்கி இருந்தது.

இவர் கத்தார் கிரிக்கெட் சங்கத்தால் நடத்துப்படுகின்ற ரி-20 போட்டிகள், ஒருநாள் போட்டிகள், பல்கலைக்கழங்களுக்கு இடையிலான போட்டிகள், பாடசாலைகளுக்கு இடையிலான போட்டிகள், மகளிர் அணிகளுக்கு இடையிலான போட்டிகள் மற்றும் நிறுவனங்களுக்கு இடையிலான போட்டிகள் என பல்வேறு போட்டிகளில் தனது திறமையினால் குறிப்பிட்ட வருடங்களுக்குள் மிக சிறப்பான முறையில் நடுவராக கடமையாற்றி வருகின்றார், கத்தார் கிரிக்கெட் சபையில் கிட்டத்தட்ட 150 இற்று மேற்பட்ட நடுவர்கள் காணப்படுகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

மேலும் இவர் இன்னும் சில மாதங்களில் கத்தார் கிரிக்கெட் சபை சார்பாக ஐசிசியினால் நடாத்தப்பட இருக்கின்ற தரம் -2 பரீட்சைக்கு தோற்றவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்க சிறப்பாம்சமாகும். இவர் இலங்கை கிரிக்கெட் காட்டுப்பாட்டு சபையின் தரம் -4 நிலை நடுவராகவும், இலங்கை கிரிக்கெட் நடுவர் சங்கத்தின் தரம் 2 ஆம் நிலை நடுவராகவும் கடமையட்டுகின்றார். இவர் கடந்த வருடம் நடை பெற்ற தரம் 3 நடுவர்களுக்கான பரீட்சையில் தன்னுடைய வெளிநாட்டு பயணம் காரணமாக தோற்றவில்லை என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.



இவர் தற்போது கத்தார் நாட்டில் சார்புப்பிரிவு கிரிக்கெட் நடுவராக இலங்கை நாட்டின் சார்பாக தெரிவு செய்யப்பட்ட ஒரே இளம் வயதுடைய நடுவர் என்பதும் விசேட அம்சமாகும்.மேலும் இவர் அம்பாறை மாவட்டத்தில் கல்முனை நற்பிட்டிமுனை என்.சி.சி. விளையாட்டு கழகத்தின் தலைவரும்,தற்போது கத்தார் நாட்டில் சர்வதேச பாடசாலை ஒன்றில் ஆசிரியராகவும் கடமையாற்றுகின்றார் என்பதோடு இவர் ஒரு சிறந்த கிரிக்கெட் வீரருமாவார்.



காலைக்கதிர்
Kalaikkathir

# ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதியுடன் விஷேட கலந்தாய்வு

(பாறுக் ஷிஹான், நூருல் ஹூதா உமர்)

ஐக்கியநாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி மார்க்-ஆண்ட்ரே ஃபிராஞ்ச் மற்றும் குழுவினருக்கும் கல்முனை முஹ்யித்தீன் ஜூம்மா பெரிய பள்ளிவாசல் மற்றும் கடற்கரைப்பள்ளிவாசல் நாகூர் ஆண்டகை தர்ஹா ஷரீப் நம்பிக்கையாளர் சபையினருக்கும் இடையிலான விஷேட கலந்துரையாடல் கடந்த செவ்வாய்கிழமை பள்ளிவாசல் காரியாலயத்தில் இடம்பெற்றது.





இதன்போது இஸ்லாமிய அடிப்படைவாதம் எனும் குற்றச்சாட்டு தொடர்பிலும் மற்றும் கல்முனையின் சமகால பிரச்சினைகள், கல்முனை பிரதேச மக்கள்எதிர்நோக்கும்சமூகபொருளாதார பிரச்சினைகள் தொடர்பாகவும் விரிவாக தெளிவுபடுத்தப்பட்டு கலந்துரையாடப்பட்டது.

# சாய்ந்தமருது பழைய தபாலக வீதி வடிகான் ‘கிளீன் சிறிலங்கா’ ஊடாகச் சுத்தமானது

(ஸாகிர்)

சாய்ந்தமருது பழைய தபாலக வீதியில் வடிகான் அடைத்து, மழைநீர் ஓட முடியாது தேங்கி நிலையிலும், நாற்றம் வீசக் கூடிய நிலையிலும் காணப்பட்டது. இதனால் அவ்வீதி உள்ள பொதுமக்கள் பல இன்னல்களை அனுபவித்தனர்.

கல்முனை மாநகர சபையால் அவர்களின் இயந்திரங்களின் மூலமாக தேசிய மக்கள் சக்தியின் கிளீன் சிறிலங்கா வேலைத்திட்டதின் கீழ்



சாய்ந்தமருது பழைய தபாலக வீதியில் உள்ள வடிகானை துப்புரவு செய்யும்பணி நேற்று (வியாழக்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

மழை நீர் சீராக வழிந்தோட முடியாது காணப்பட்ட சாய்ந்தமருது பழையதபாலகவீதியில்உள்ளவடிகானை சுத்தப்படுத்தியமைக்காக இதற்காகப் பாடுபட்ட அனைவருக்கும் அப்பிரதேச மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.




# விவசாயம் மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான வலுவூட்டும் பயிற்சி நெறி

(சர்ஜூன் லாபீர்)

அஸ்வசும, சமுர்த்தி மற்றும் விவசாயம் சார்ந்த குடும்பங்களுக்களை வலுவூட்டும் பயிற்சி நெறி நேற்று(வியாழக்கிழமை) சம்மாந்துறை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல். முஹம்மது ஹனீபாவின் வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைக்கமைய இடம்பெற்ற இந் நிகழ்வுக்கு யுனிலிவர் நிறுவனத்தின் லைபோய் முழுமையான அனுசரனை வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இந் நிகழ்வுக்கு சமுர்த்தி பிரிவின் உத்தியோகத்தர்கள் பயனாளிகள் என பலரும் கலந்து கொண்டனர்.





# கல்முனையன்ஸ் போரத்தின் ஸஹர் உணவு விநியோகம்

(நூருல் ஹூதா உமர்)

கல்முனை பிராந்தியத்திலுள்ள அரச மற்றும் தனியார் வைத்தியசாலைகளில் நோயாளிகளுடன் தங்கியுள்ளவர்களுக்கும் மற்றும் தூர பிரதேசங்களிலிருந்து கல்முனைக்கு பல்வேறு தேவைகளுக்காக வருகை தருபவர்களுக்குமான இலவச ஸஹர் உணவு விநியோகிக்கும் செயற்றிட்டத்தினை இவ்வருடமும் கல்முனையன்ஸ் போரம் மிக வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளது.

தூர இடங்களிலிருந்து கல்முனை பிராந்தியத்திற்கு பல்வேறுபட்ட தேவைகளுக்காக வருகை தருபவர்கள் புனித நோன்பினை நோற்பதற்கான ஸஹர் உணவை பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமத்தை எதிர்நோக்குவது கல்முனையன்ஸ் போரத்தின் கவனத்திற்கு எட்டப்பட்டதால் இச்செயற்றிட்டம் கடந்த ஏழு வருடங்களாக தொடர்ந்து தங்குதடையின்றி முன்னெடுக்கப்பட்டுவருகிறது.

இத்திட்டத்தின் மூலம் இவ்ரமழான் முழுவதும் மொத்தமாக 5438 ஸஹர் உணவு ஏற்பாடுகளை கல்முனை, மருதமுனை, சாய்ந்தமருது மற்றும் காரைதீவு ஆகிய பிரதேசங்களுக்கு எவ்வித தடைகளுமின்றி உரிய ஸஹர் நேரத்திற்கு நோன்பாளிகளின் காலடிக்கே சென்று வழங்கப்பட்டது.

மேற்படி ஸஹர் உணவானது ரமழான் காலத்தில் மாலை 5.00 மணியிலிருந்து இரவு 7.00 வரைக்கும் தொலைபேசியூடாக கிடைக்கப்பெறும் முன்பதிவுகள் அடிப்படையில் விநியோகிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

குறித்த சம்பவம் தொடர்பில் சம்மாந்துறை பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## தையிட்டி விகாரை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நல்லிணக்கத்துக்குமான அலுவலகப் பிரதிநிதிகள், யாழ். மாவட்ட சர்வமதப் பேரவைப் பிரதிநிகள் தையிட்டி காணி உரிமையாளர்கள், செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர். கூட்டம் நடந்துகொண்டிருக்கும்போதே வெளியே வந்த அமைச்சர்கள் உள்ளிட்ட ஆளும்தரப்பின் பிரதிநிதிகள் பிரதான நுழைவாயிலில் ஊடகவியலாளர்கள் அவர்களின் கருத்துக்களைப் பெறக் காத்துக்கொண்டிருந்த நிலையிலும் மாற்றுப் பாதை வழியாக வெளியேறிச் சென்றனர்.

கூட்டத்தில் கருத்து தெரிவித்த அமைச்சர் மற்றும் பிரதியமைச்சர், தையிட்டி விகாரைப் பிரச்சினைக்கு சுமுகமான ஓர் தீர்வை வழங்குவதற்கு தாம் முனைப்புக் காட்டுகின்றபோதும், தேர்தல் காலத்தில் இவ்வாறான கலந்துரையாடல்களில் தம் ஈடுபடுவது பொருத்தமற்றது எனக் கூறியே வெளியேறினர்என்றுகாணிஉரிமையாளர்கள் தெரிவித்தனர்.

''தேர்தல் காலத்தில் இவ்வாறான கலந்துரையாடல்களில் தம் ஈடுபடுவது பொருத்தமற்றது'' என்று கூறி அமைச்சர் வெளியேறிவிட்டார்எனஅவர்கள்தெரிவித்தார்.

''இக்கலந்துரையாடலுக்கு பௌத்த மகா சங்கத்தை சார்ந்த நான்கு பிரதிநிதிகள் வந்திருந்ததுடன் பொருத்தமற்ற தமது தரப்பு நியாயங்களை முன்வைத்திருந்தனர். அவர்களுக்கும் எமது தரப்பு பதில்களைத் தெளிவாக முன்வைத்திருக்கிறோம். இந்நிலையில், தேசிய ஐக்கியத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம் சார்ந்தவர்கள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் இவ்விவகாரம் தொடர்பான தமது நடவடிக்கைகளைத் தொடங்கும் அதேவேளை, இருதரப்பு நியாயங்களையும் பரிசீலித்து ஒரு தீர்வை எட்டவுள்ளதாக உறுதியளித்துள்ளனர்' எனவும் காணி உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

''தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் இலகுவாக தீர்க்கக்கூடிய ஒரு பிரச்னை இது. நீதி யார் பக்கம் என்பது தொடர்பான தெளிவு அனைவருக்கும் உண்டு. எனினும் குறித்த விவகாரத்துக்கான தீர்வை எட்டுவதற்கான முன்முனைப்பை முன்வைக்கத் தயங்குகிறார்கள் எனக் குற்றஞ்சாட்டினார். இந்த தயக்கம் தொடருமா இருந்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்காது. எனவே தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு இந்த தயக்கத்தில் இருந்து வெளியே வர வேண்டும்'' எனச்

## வேட்புமனு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சான்றிதழ்களின்சான்றளிக்கப்பட்ட நகல்களைச் சமர்ப்பிக்காதது, முறையாகப் பிரமாணத்தைச் சமர்ப்பிக்காதது, பிறப்புச் சான்றிதழ்களின் நகல்களைமட்டும்சமர்ப்பித்ததன் காரணமாக நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்கள் தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன.

மேலும், வேட்புமனுக்கள் நிராகரிப்பு தொடர்பாக நீதிமன்றத்தில் தற்போது நிலுவையில் உள்ள மனுக்கள் தொடர்பாக, நாளை வரை தேர்தலை நடத்துவதற்கான எந்தவொரு மேலதிக நடவடிக்கைகளையும் எடுப்பதைத் தவிர்க்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று சம்பந்தப்பட்ட தேர்தல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டது. தொடர்புடைய மனுக்கள் நீதிமன்றத்தில் பரிசீலிக்கப்பட்ட நிலையில், மேலதிக விசாரணைகளுக்காக நாளை(இன்று)வரைஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## மீண்டும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தர்ப்பவாத அரசியலில் ஈடுபடும் ஆளும்தரப்பு. இந்த உள்ளூளராட்சிமன்றத் தேர்தல் மாற்றத்துக்கான சமிஞ்ஞையாக அமையவேண்டும். அந்த மாற்றத்தை ஏற்படுத்த நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.

ஜே.வி.பி. ஜனாதிபதி இன்று முழு அரசியலையும் வங்குரோத்தடையச் செய்துள்ளார். தேர்தல்களுக்கு முன்னர் அவரால் வழங்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு என்னவாயிற்று? மக்களுக்கான உண்மையான மறுமலர்ச்சியை ஐக்கிய மக்கள்சக்திஆட்சியால்மாத்திரமேஉருவாக்க முடியும்.

தற்போதுநாட்டில்நடைமுறைப்படுத்தப்படும் எந்தவொரு வேலைத்திட்டமும்திருப்தியளிகக் கூடியதாகஇல்லை. அமெரிக்கஜனாதிபதிட்ரம்ப் அறிவித்துள்ள வரி அதிகரிப்பு இலங்கையின் ஏற்றுமதிப் பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே என்ன செய்வதெனத் தடுமாறிக் கொண்டிருக்காமல் அதற்காக நிபுணர் குழுவொன்றை அமைத்து அக்குழுவை பேச்சு நடத்த வொஷிங்டனுக்கு அனுப்பி வைக்குமாறு ஆளும்தரப்பிடம் வலியுறுத்துகின்றோம்.

இவ்வாறானதொருநெருக்கடிஏற்படும்என இதற்கு முன்னர் பல சந்தர்ப்பங்களில் நாம் குறிப்பிட்டிருக்கின்றோம். நாடாளுமன்றத்தில் இதுகுறித்துகேள்வியெழுப்பியபோதுஎமதுஒலி வாங்கிகள் நிறுத்தப்பட்டன. அமெரிக்காவுக்கு தூதுக்குழுவொன்றை அனுப்பி பேச்சு முன்னெடுக்கபட்டதாக ஆளும்தரப்பு தெரிவித்திருந்தது. அவ்வாறெனில் அந்த பேச்சின் பிரதிபலன் இதுதானா?- என்றார்.

## ஆடை, உணவு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விடயம் குறித்து தீவிர கவனம் செலுத்தியுள்ளோம் என்று பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் அனில் ஜயந்த தெரிவித்தார்.

இலங்கையை மாத்திரம் இலக்காகக் கொண்டு அமெரிக்கா தீர்வை வரியை விதிக்கவில்லை. அமெரிக்காவுடன் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் சகல நாடுகளுக்கும் இந்த தீர்வை வரி விதிக்கப்பட்டுள்ளது.பொதுவான கொள்கை அடிப்படையில்அமெரிக்கா இந்த வரிவிதிப்பை அமுல்படுத்தியுள்ளது.

அமெரிக்கா வர்த்தக பற்றாக்குறையை அடிப்படையாகக்கொண்டுஇந்ததீர்மானத்தை எடுத்துள்ளது. பூகம்பத்தால் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ள மியன்மாருக்கும் தீர்வை வரி விதிக்கப்பட்டுள்ளது. வரி விவகாரம் தொடர்பில் ஆளும்தரப்பு அமெரிக்காவுடன் பேச்சில் ஈடுபடவில்லை ,தலையிடவில்லை என்றுசமூகவலைத்தளங்களில்குறிப்பிடுவது முற்றிலும் தவறானதொரு கருத்தாகும்.

அமெரிக்காவின் இந்தத் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் பேச்சு நடத்தவுள்ளோம். ஏப்ரல் 9க்குப் பின்னர் இந்ததீர்மானத்தைநடைமுறைப்படுத்துவதாக அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது. இதற்கு முன்னர் பேச்சு ஊடாக தீர்வை வரி வீதத்தை குறைத்துக் கொள்வது தொடர்பில் கோரிக்கை முன்வைக்க முயற்சித்துள்ளோம்.

சர்வதேச நாணய நிதியத்தின் செயற்திட்ட ஒப்பந்தங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு மத்தியில் இலங்கை சகல நாடுகளின் ஒத்துழைப்புடன் செயற்படுகிறது. ஆகவே இலங்கையின் பொருளாதார நிலைமையை குறித்து முன்னிலைப்படுத்திய விடயங்களுடன் பேச்சில் ஈடுபடமுடியும்.

அமெரிக்காவின்புதியகொள்கையுடன்தான் எமது நிலைப்பாட்டை தெளிவுப்படுத்த முடியும். பிறிதொரு நாட்டின் கொள்கை அமுலாக்க விவகாரத்தில் நாடு என்ற ரீதியில் அழுத்தம் பிரயோகிக்க முடியாது. அமெரிக்க வரியால் ஆடை உற்பத்தி, உணவு உற்பத்தி உள்ளிட்ட துறைகளின் ஏற்றுமதிகளுக்கு கணிசமான அளவில் பாதிப்பு ஏற்படும்.

இதனால் இலங்கையின் உற்பத்திக்கான கேள்விகள் குறைவடைந்து உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படலாம். இந்த விடயம் குறித்து தீவிர கவனம்செலுத்தியுள்ளோம். அமெரிக்கா தனது தீர்மானத்தில் மாற்றம் ஏற்படுத்தாவிடின் மாற்று வழிமுறைகள் பல உள்ளன. ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையின் ஊடாக விசேட சலுகைகள் குறித்து பேச்சு நடத்தலாம். எமது தீர்வை வரி கொள்கையை இலகுப்படுத்தி பேச்சுக்களில் ஈடுபடலாம் - என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






உ
முருகன் துணை

## நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

## செவ்வழி நயனம்

# மாவிட்டபுரத்தில் மகா கும்பாபிஷேகம்

மாவைப் பெருங் கோயிலில் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 11.04.2025 பங்குனி உத்தரத்தன்று நிகழவுள்ளது.

சுமார் ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு நிகழும் இப்பெருவிழா ஈழத்தின் வடபுலத்தின் முக்கிய நிகழ்வாகும்.

எனவே, இயன்றோர் இயன்ற பங்களிப்புகளை ஆற்றி இப்பெருவிழா சிறக்க உதவுவது வரலாற்றுப் பணியாக அமையும். ஊர் கூடித் தேர் இழுக்க வேண்டிய உயரிய நிகழ்வு இது.

இக்கோயிலின் தனிப் பெரும் சிறப்புக்களில் சில..

1. இத்தலம் பொதுயுகத்துக்குப் பின் (கி.பி) 789 ஆம் ஆண்டு (8 ஆம் நூற்றாண்டு) மன்னர்களால் கட்டப்பட்டது.

2. அப்பொழுது மதுரையரசன் திசையுக்கிரப் பெருவழுதியின் ஆணையால் சிதம்பரத்து சிவாச்சார்ய மரபினரான பெரியமனதுள்ளார் மாவிட்டபுரத்துக்கு அழைத்து வரப்பெற்றார்.

இவ்வாறு இலங்கையின் அர்ச்சக– சிவாச்சார்ய பாரம்பரியத்தின் மூல வித்தாக திகழும் திருத்தலம் இது.

3. இலங்கையில் ஆதீனபாரம்பரியத்தின் முன்னோடியான மாவை ஆதீனம் இத்தலம் சார்ந்தது. சிவாச்சார்யாதீனமான அது ஆயிரத்து இருநூறாண்டு வரலாற்றுத் தொடர்ச்சியுடையது.

4. 1980 களுக்கு முன் இக்கோயில் இருந்த உயர் நிலை எண்ணும் தோறும் வியப்பூட்டுவது. அது போர்– வலி வடக்கு இடப்பெயர்வு– பேரழிவு – தொடர்ச்சியாக பல ஆண்டுகள் ஊருக்குள் மக்கள் நுழைய இயலாத நிலை போன்றவற்றால் பெரிய அழிவை சந்தித்தது.

5. அக் காலத்தில் இக்கோயிலில் ஆண்டு தோறும் ஈழத்தின் சிறந்த நாதஸ்வரக்கலைஞருக்கு 'தங்க நாதஸ்வரம்' வழங்கி கௌரவிக்கும் வழக்கம் இருந்ததாம்.

இலங்கையில், தவில்– நாதஸ்வர இசை முதன்முதலில் தோன்றிய தலம் இதுவே என்பர்.

6. பெரும் பூச்சப்பரச் சோடனைகள் இங்கு தானாம் உருவாயிற்று.

வட மாகாணத்தில், மின் ஒளியூட்டப்பட்ட முதற் கோயில் இது என்பர்.

7. இலங்கையில் முதல் ராஜகோபுரம், முதல் வெள்ளிக் கொடிமரம் என்று இந்த மாவைப்பெருங்கோயில் பொலிவுற்றிருந்தது.

8. அக்காலத்தில், தங்கத்தாலான முத்துக்குமார சுவாமி விக்கிரகம் ஒன்றும் இருந்திருக்கிறது.

9. இவ்வாறாக, ஈழத்தின் வேத சிவாகம மரபுத்திருத்தலங்களில் தலைமைத்தலமாக மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலே விளங்கியதால், பண்டிதமணி அவர்களும் 'ஈழ வள நாட்டில் வேதாகம சம்பந்தமான ஒரே ஒரு கந்தன் கோயில் இஃதொன்றே என்று ஒரே ஒரு விரலை மட்டும் மடிக்கத்தக்க வகையில் முதன்முதல் அமைந்தது மாவிட்டபுரம்' என்றே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

10. இடையில் ஏற்பட்ட இடர்களை அகற்றி, தற்போதைய ஆதீனகர்த்தர் மஹாராஜஸ்ரீ ஷ. இரத்தினசபாபதிக் குருக்களும் அவரது குமாரர் ஞானஸ்கந்தக் குருக்களும் மீண்டும் திருக்கோயிலை பழைய நிலை நோக்கி திருப்ப பெருமுயற்சி செய்கிறார்கள். பெரிய பெரிய சுதைவடிவங்கள், நெடிதுயர்ந்த மதில்கள், என்று பழைய பெரு வடிவத்திலேயே கோயில் மீளுருவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

11. பழைமையான மகோத்திர மகாரதம் யுத்தகாலத்தில் அழிவடைந்ததால், சென்ற 2019 ல் அதை விட உயரமாக, தனித்துவமாக மகோத்திரப் பெருந்தேர் அமைக்கப்பட்டு வெள்ளோட்டம் கண்டிருக்கிறது.

12. மாவைப்பெருமானை பாடாத யாழ்ப்பாணப்புலவர் இல்லை என்ற அளவுக்கு இப்பெருமான் பேரில் பல்வேறு பிரபந்தங்கள் நிரம்பவே இருக்கின்றன.



13. அருணகிரியார் காலத்தில் இத்தலம் அருக்கொணாமலை என வழங்கியது என்றும், அவ்வாறே திருப்புகழ் அருளினார் என்றும் ஒரு குறிப்பும் உண்டு. தணிகைமணி வ.சு.செங்கல்வராய பிள்ளையின் குறிப்பும் (நகுலேசுவரம் அருகில்) அவ்வாறே கருதுவதாக உணர முடிகிறது.

14. துரகானன விமோசன புரி என்றும் போற்றப்படும் இத்தலம் மாருதப்புரவீகவல்லி என்ற சோழ இளவரசியின் குதிரை முகம் (மாமுகம்/ துரகானனம்) காட்டிய குன்ம நோய் விலகிய தலம்.

15. அது மட்டுமல்ல, இந்து மகா சமுத்திரத்தில், சூரபதுமனான மா மரத்தை அறுத்து வெற்றி பெற்ற வெற்றி பெருமான் எழுந்தருளிய மகா ஸ்தலம்.

16. இந்தப் பெரிய கோயிலில் அரை நூற்றாண்டுக்குப் பிறகு நடைபெறும் இந்த மகோன்னத விழாவில் ராமர் பாலத்தில் அணில் போலவேனும் நம் பணியைச் செய்ய வேண்டாமா?

நீர்வை. மயூரகிரிக் குருக்கள்



காலைக்கதிர் Kalaikkathir

# ஆதம்பாவா எம்.பியின் கருத்துகள் இலங்கை அரசமைப்புக்கு முரண்

## முன்னாள் தவிசாளர் ரனூஸ் இஸ்மாயில் தெரிவிப்பு

(நூருல் ஹுதா உமர்)

தேசிய மக்கள் சக்தியின் ஒரு சில நாடாளுமன்ற உறுப்பினர்களை தவிர அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் விடயதான அறிவு இல்லாதவர்களாகவும், அரசாங்க அதிகார செயல்முறை குறித்த அறிவு இல்லாதவர்களாகவும் அரசியல் களத்திலே அனுபவம் இல்லாதவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதே யதார்த்தமாகும் என கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகாரசபை முன்னாள் தவிசாளர் ரனூஸ் இஸ்மாயில் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

நடைபெற இருக்கும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஆளும் அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிக்கு வாக்களித்து அவர்களின் தலைமையில் உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சியை ஒப்படைக்காவிட்டால் அந்த குறித்த உள்ளூராட்சி மன்றங்களுக்கான நிதியினை ஒதுக்குவதில் அரசாங்கம் ஆர்வம் காட்டாது என தேசிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஆதம்பாவா அவர்களுடைய கருத்தொன்றை பார்க்கக் கிடைத்தது. தேசிய மக்கள் சக்தி நிறுத்தியுள்ள வேட்பாளர்கள் தவிர அனைவருமே ஊழல் மிக்கவர்கள் என்பதால் அவ்வாறான ஊழல் மிக்கவர்களின் தலைமையில் அமையும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு அரசாங்கம் எவ்விதமான நிதி உதவியும் ஒதுக்காது என அவர் அதற்கு நியாயம் கற்பித்துப் பேசுகிறார். தேசிய மக்கள் சக்தியின் ஒரு சில நாடாளுமன்ற உறுப்பினர்களை தவிர அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் விடயதான அறிவு இல்லாதவர்களாகவும், அரசாங்க அதிகார செயல்முறை குறித்த அறிவு இல்லாதவர்களாகவும் அரசியல் களத்திலே அனுபவம் இல்லாதவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதே யதார்த்தமாகும்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் இலக்குகளை முன்னெடுத்து செல்வதில் எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவால்களாக அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர்களின் மேலே சொல்ல விடயதான அறிவு மற்றும் அதிகாரத்துடனான செயற்பாட்டு அரசியல் அனுபவம் இல்லாத நிலை, இதுவரை காலமும் நாட்டை சீரழித்த ஊழல் மிக்க அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் நாடாளுமன்ற உறுப்பினர் ஆதம்பாவா அவர்களுக்கு உள்ளூராட்சி மன்றங்களில் செயற்பாட்டு முறைமை குறித்து தெளிவான அறிவில்லை என்பது அவரது கருத்தை பார்க்கும் பொழுது தெரிகிறது.

இவர் எவ்வாறு பிரதேச அபிவிருத்தி கூட்டங்களுக்கு தலைமை வகித்து அரசாங்கத்தின் அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு பணியாற்றப் போகிறார் என்று எனக்கு விளங்கவில்லை.

உள்ளூராட்சி மன்றங்கள் என்பது அரசியல் ரீதியான கருத்துக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அல்லது சட்டம் இயற்றுகின்ற ஒரு நிறுவனம் அல்ல. உள்ளூராட்சி மன்ற இலக்குகளுக்கு வெளியே நின்று தான் இன்று அதிகமான வேட்பாளர்கள் இப்போது பேசிக் கொண்டிருக்கிறார்கள். உள்ளூராட்சி மன்றங்களுடைய இயக்கம் குறித்து தெளிவான சட்ட வரம்புகள் காணப்படுகின்றன. அவைகளுக்குள்ளே நின்று தான் ஓர் உள்ளூராட்சி மன்றத்தின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் இயங்க வேண்டும்.

ஓர் உள்ளூராட்சி மன்றம் மூன்று வகையான நிதிகளில் தனது செயற்பாடுகளை அமைத்துக் கொள்ளும். கிழக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தால் காலத்துக்குக் காலம் அல்லது வருடா வருடம் ஒதுக்கப்படும் மாகாண கட்டுறுத்து நிதி , அதைப்போலவே அலுவலக மற்றும் நிர்வாக விஸ்தரிப்புக்கு பயன்படுத்தக்கூடிய , இந்த இரண்டு நிதிகளும் தவிர பெரும்பாலும் ஓர் ஊராட்சி மன்றம் செயற்படுவது அதனுடைய சொந்த வருமானத்தில்தான். சோலை வரி உட்பட ஏனைய வரிகள், சேவைக்கட்டணங்கள், ஏல விற்பனைகள், தண்டப் பணங்கள், உள்ளூராட்சி மன்றத்தால் கொண்டு நடாத்தப்படும் வேறு வகையான தொழில் முயற்சிகள் இப்படி பல்வேறு வகையான வருமானங்கள் ஓர் உள்ளூராட்சி மன்றத்துக்கு காணப்படும். ஒரு திறமையான உள்ளூராட்சி மன்றத்தின் தவிசாளர் என்பவர் வருமானத்தை அதிகரிக்க கூடிய விதத்தில் அந்த உள்ளூராட்சி மன்றத்தை நிர்வகிக்கும் திறன் காணப்பட்டால் மாத்திரம் தான் அவரால் ஒரு சிறந்த உள்ளூராட்சி மன்ற நிர்வாக தலைவராக இயங்க முடியும்.

உலகத்தில் சுய நிர்ணயத்துக்காக போராடும் தேசங்களின் விடுதலை வேண்டி உள்ளூராட்சி மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றக் கூடியவர்களாக அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய நடவடிக்கை குறித்து பேசிக் கொண்டிருப்பவர்களாக அல்லது கட்சி அரசியல் குறித்து பிரஸ்தாபிப்பவர்களாக அந்த தலைவர்களும் உறுப்பினர்களும் காணப்பட்டால் மக்களுடைய வரி பணத்தை அல்லது அந்த உள்ளூராட்சி மன்றத்தின் வருமானத்தை மிக மோசமாக பயன்படுத்திய ஒரு சபையாகத்தான் அந்த உள்ளூராட்சி மன்றம் அமையும். உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மக்கள் வாக்களிக்கும் பொழுது தனது பிரதேசத்தின் வேட்பாளர்கள் நமது பிரதேச அபிவிருத்தியில் எப்படியான மாற்றங்களை செய்வதற்கு வந்திருக்கிறார்கள் அந்த மாற்றங்களை அவர்களால் உள்ளூராட்சி மன்ற கட்டமைப்புக்கு உள்ளே செய்ய முடியுமா என்பதை ஆழமாக நோக்கி வாக்களிக்க வேண்டும்.

அவ்வாறான சிறந்த வேட்பாளர்களை தான் அரசியல் கட்சிகளும் இந்த தேர்தலுக்கு நிறுத்த வேண்டும். இந்த இரண்டு விடயங்களில் எங்கு பிழை நடந்தாலும் ஓர் உள்ளூராட்சி மன்றம் திறமையாக செயற்பட முடியாது. நாடாளுமன்ற உறுப்பினர் ஆதம்பாவா அவர்களுடைய கருத்தானது இலங்கையினுடைய அரசமைப்புச் சட்டத்துக்கும் மக்களாட்சி தத்துவத்துக்கும் எதிரான மோசமான ஒரு வன்முறைக் கருத்தாகும் என்று தெரிவித்துள்ளார்.




காலைக்கதிர் Kalaikkathir

# சாய்ந்தமருது வீதிகளில் தெருவிளக்குகள்

(ஸாகிர்)

சாய்ந்தமருது அல்ஹிலால் பாடசாலை முதல் காரைதீவு வரையான பிரதான வீதிகளில் மிக நீண்ட காலமாக ஒளிராமல், கேட்பாரற்றுக் கிடந்த தெரு விளக்குகள் சாய்ந்தமருது பிரதேச அபிவிருத்தி குழு தீர்மானத்தின் அடிப்படையில், அரசமைப்பு பேரவை உறுப்பினரும் அம்பாறை மாவட்ட கரையோர பகுதிகளுக்கான அபிவிருத்திக் குழு தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அபூபக்கர் ஆதம்பாவா அவர்களது முயற்சியால் புதன்கிழமை திருத்தி அமைக்கப்பட்டு, ஒளிர வைக்கப்பட்டன.

இந்த வேலைத்திட்டம் கல்முனை மாநகர சபையால் முன்னெடுக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.







# இந்தியாவை பகைத்துக்கொண்டு நாம் எதனையும் செய்ய முடியாது

## வஜீர அபேவர்த்தன கிளிநொச்சியில் தெரிவிப்பு

ஐக்கிய தேசியக்கட்சி சார்பாக கிளிநொச்சி மாவட்டத்தின் மூன்று பிரதேச சபைகளில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கும் கட்சியின் செயற்பாட்டாளர்களுக்குமிடையிலான கலந்துரையாடல் புதன்கிழமை பிற்பகல் கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெற்றது.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றகலந்துரையாடலில்அகிலவிராஜ் காரியவசம், வஜீர அபேயவர்த்தன, தலதா அத்துக்கோரல உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இங்கு கருத்து தெரிவித்த வஜீர அபேயவர்த்தன மேற்படி விடயத்தை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் -

இந்த நாடானது வறுமை நிலைக்கு சென்றது. அந்தநிலையில்பொறுப்பேற்றார். அப்பொழுது ரணில் விக்கிரமசிங்க சொல்லவில்லை பணம் இல்லை என்று அப்பொழுது ஐக்கியதேசியக்கட்சிக்கு ஓர் ஆசனம் மாத்திரம் கிடைத்தது. அந்த ஆசனத்தை வைத்து ரணில் விக்கிரமசிங்க பிரதமர் ஜனாதிபதியானார். அதன் மூலம் மக்களுக்கு அஸ்வெசும, காணி உறுதிகளை வழங்கினார். ஆனால் மக்கள் அவரை வீட்டுக்கு அனுப்பியுள்ளனர்.

1987 ஆம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தத்தை கைச்சாத்திட்டிருந்தோம். அதன் மூலம் மாகாண சபையை உருவாக்கினோம். அதனை இப்போதைய




அரசாங்கம் நிறுத்த முயல்கிறது. இந்த விடயம் இங்குள்ள இளைஞர்களுக்குத் தெரியாது.

மாகாண சபை உருவாக்கப்பட்ட பின்பு முதலாவது முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்த போது இந்தியாவுடன்சிலஒப்பந்தங்களைகைச்சாத்திட்டிருந்தார். மின் சக்தி சம்பந்தமாக ஒப்பந்தத்தை கைச்சாத்திட்டிருந்தார்.

இந்திய பிரதமர் இலங்கை வருகின்றார். நாம் வெற்றி பெற வேண்டுமாக இருந்தால் ஆசியாவுடன் போட்டி போடவேண்டும். இந்தஒப்பந்தத்தைநீக்கினால்உலகநாடுகள் எம்மை நம்பமாட்டார்கள். அந்த இரண்டு பில்லியன் டொலரும் நீக்கப்பட்டால் நாங்கள் எங்கு தேடுவது தண்ணீர் குடிக்க முடியாது. உரிமைகளை பெறமுடியாது, யானைகளுக்கான பாதுகாப்பு வேலிகளை போடமுடியாது. ஆகவே நாங்கள் மீண்டும் கஷ்டத்தில் வீழ்வோம். எனவே வருகின்ற உள்ளூராட்சி தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியை வெற்றி பெற வைக்கவேண்டும். - என்றார். 316



# பாலியல் குற்றவாளிக்கு 7 வருட கடூழியச் சிறை

## திருமலை மேல் நீதிமன்றம் தீர்ப்பு

(அபு அலா)

திருகோணமலை கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 8 வயது சிறுவனை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றவாளி ஒருவருக்கு 7 வருட கடூழிய சிறை தண்டனை வழங்குமாறு திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி என்.எம்.எம்.அப்துல்லாஹ்வினால் நேற்றைய தினம் (2) தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு 7 வருட கடூழிய சிறை தண்டனை வழங்கப்பட்டவர் கிண்ணியா கட்டையாறு மதரஸா வீதியில் வசித்து வரும் ஜவ்பர் ரிஸ்வான் (38 வயது) எனவும் தெரியவந்துள்ளது.

கிண்ணியா கட்டையாறு பகுதியில் மத்ரசாவிற்கு செல்லும்போது சிறுவனை பலவந்தமாக இழுத்துச் சென்று பாரதூரமான முறையில் கடந்த 2015 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆம் திகதி பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளதாக கிண்ணியா பொலிஸாரினால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த வழக்கு கடந்த பத்து வருடங்களாக இடம்பெற்று வந்த நிலையில் திருகோணமலை மேல் நீதிமன்றில் குறித்த வழக்கிற்கான தீர்ப்பு (02) திறந்த நீதிமன்றில் வாசிக்கப்பட்டது.

மத்ரசாவிற்குச் சென்ற மாணவனை பலாத்காரமாக இழுத்துச் சென்று பாரதூரமான முறையில் பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளதாகக் கூறியே அவருக்கெதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த நபருக்கு 7 வருட கடூழிய சிறை தண்டனை வழங்குமாறும், 1500 ரூபாய் தண்டப்பணம் செலுத்துமாறும் அந்த தண்ட பணத்தை செலுத்தத் தவறும் பட்சத்தில் ஒருமாத சாதாரண சிறை தண்டனை வழங்குமாறும் நீதிபதி என்.எம்.எம்.அப்துல்லாஹ் கட்டளையிட்டார்.

மேலும் பாதிக்கப்பட்ட சிறுவனுக்கு பத்தாயிரம் ரூபாய் நஷ்ட ஈடாக வழங்குமாறும் அதனை கட்டத் தவறினால் ஆறு மாத கால சிறை தண்டனை வழங்குமாறும் பாதிக்கப்பட்டோர் நிதியத்திற்கு தண்டனைப் பணத்திலிருந்து 20 வீதம் செலுத்த வேண்டும் எனவும் திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி என்.எம்.எம்.அப்துல்லாஹ் அத்தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

# வாகன விபத்தில் சாரதி சம்மாந்துறையில் காயம்

(பாறுக் ஷிஹான்)

வீதியை விட்டு விலகி மின்கம்பத்துடன் வாகனமொன்று மோதுண்டதில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்முனை அம்பாறை பிரதான வீதியில் ஆண்டியசந்தி அருகில் நேற்று (வியாழக்கிழமை) அதிகாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அம்பலாங்கொடை பகுதியில் இருந்து மீன்களை ஏற்றிக்கொண்டு மாளிகைக்காடு பகுதிக்கு சென்ற நிலையில் சாரதிக்கு ஏற்பட்ட திடீர் தூக்கம் காரணமாக வீதியை விட்டு விலகி வாகனம் அருகில் உள்ள சுவரில் மோதி விபத்திற்குள்ளாகியுள்ளது.

இதன் போது 41 வயது மதிக்கத்தக்க சாரதி காயமடைந்து சிகிச்சைக்காக சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன் வாகனம் உட்பட மின்கம்பம் சேதமடைந்துள்ளது.




# அங்கவீனமுற்ற பிள்ளைகளுக்கு கல்வி உதவிகொடுப்பனவு வழங்கி வைப்பு

(சர்ஜுன் லாபீர்)

சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட அங்கவீனமுற்ற மற்றும் அங்கவீனமுற்ற பெற்றோர்களது பிள்ளைகளுக்கான கல்வி உதவிக் கொடுப்பனவிற்கான காசோலைகள் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று(வியாழக்கிழமை) உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம் தலைமையில் வழங்கி வைக்கப்பட்டது.







சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபாவின் வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைக்கமைய இடம்பெற்ற இந்நிகழ்வின் போது நிர்வாக உத்தியோகத்தர் ஜே.எம் ஜெமீல், சமூக சேவை உத்தியோகத்தர் ஏ.எம்.எம் சாபிர், கிராம நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.எம் நளீர், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஏ.ஜாபிர், அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.டி .முஜாஹிடீன், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் ஏ.யூ.எம் சமீம் மற்றும் எம்.எப் சாஜிதா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# தமிழ் மக்கள் அனுபவித்து வரும் துயரங்களுக்கு தேசிய மக்கள் சக்தி மட்டுமே தீர்வைக்காணுமாம்

நீண்ட காலமாக தமிழ் மக்கள் அனுபவித்து வரும் துயரங்களுக்கு தேசிய மக்கள் சக்தி மட்டுமே தீர்வு காணும் என யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி தான் உறுதியாக நம்புவதாக தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் மக்கள் தொடர்பாகத்தை நவாலிப் பகுதியில் புதன்கிழமை திறந்து வைத்து உரையாற்றும்போதே அவ்வாறு தெரிவித்தார்.

றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி மேலும் தெரிவிக்கையில் -

ஒரு பயிரை விதையிட்டு வளர்த்து பின்னர் பூத்து காய், கனி தரும் வரை மக்கள்





அந்த பயிரை பாதுகாத்து பலன் பெறுவர். அதே போன்று தேசிய மக்கள் சக்தியின் கனிகளைப் பெறும் வரை மக்கள் ஆதரவு தந்து அதன் பயனைப் பெற வேண்டும்.

இந்த முறையும் மக்கள் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களை ஆதரித்து கிராமங்களை எம்முடன் இணைந்து மேம்படுத்த வேண்டும் எனத் தெரிவித்தார்.

மானிப்பாய் தொகுதி அமைப்பாளர் சுரேன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நவாலி பிரதேச சபை வேட்பாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# மூதூர் மண்ணுக்கு பெருமை சேர்த்த விசேட தேவை உடைய மாணவன்

(முஹம்மது ஜிப்ரான்)

மூதூர் பிரதேச செயலக பிரிவில் இயங்கி வரும் டயமன் விசேட பாடசாலையில் கல்வி பயிலும் ஆர்யாசிர் என்பவர் விசேட தேவைக்குரிய மாணவன் ஆவார்.

விசேட தேவையுடைய மாணவர்களுக்கான மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டு 100 மீற்றர் ஓட்ட போட்டியில் முதலிடம் பெற்று தேசிய மட்டத்திற்குத் தெரிவாகியுள்ளார்.

இவர் தேசிய மட்டத்தில் தெரிவாகும் பட்சத்தில் சீனாவில் நடக்கவிருக்கும் பரா ஒலிம்பிக் செல்லும் வாய்ப்பைப் பெறுவார் என்பது குறிப்பிடக்க அம்சமாகும்.

மூதூர் மண்ணுக்கு முதல் முறையாக விசேட தேவையுடைய மாணவன் ஆர்



யாசிர் பெருமை சேர்த்து தந்துள்ளார்.

எனவே மாணவனை பயிற்றுவித்த டயமன் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் சமூக சேவை உத்தியோகத்தர் எம்.எம் நிரூஸ் சேருக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

# வடமராட்சி தெற்கு மேற்கில் பொது வழிக்கு இடையூறு ஏற்படுத்தும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை

## பிரதேசசபை செயலர் அறிவுறுத்து

வடமராட்சி தெற்கு - மேற்கு (கரவெட்டி) பிரதேச சபை ஆளுகைக்குட்பட்ட பிரதேசத்தில் பண்டிகைக் காலத்தில் பொது வழிக்கு தொல்லை ஏற்படுத்தும் வகையில் பொருள்களை காட்சிக்கு வைப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை செயலாளர் கணேசன் கம்ஸநாதன் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் நெல்லியடி நகர மையப்பகுதிகளில் வர்த்தக நிலையங்களுக்கு முன்னால் குறிப்பாக பண்டிகைக் காலங்களில் பொதுவழிகளில் இடையூறு ஏற்படுத்தும் வகையில் பொருள்களை காட்சிப்படுத்துகின்ற போது வீதியின் ஓரமாக நடந்து செல்லும் பொதுமக்களின் சுயாதீனமான நடமாட்டங்களுக்கு தடை ஏற்படுத்தப்பட்டுள்ளமையை தடுக்கும் நோக்கில் சபையின் உத்தியோகத்தர்கள் செயற்படுகின்ற போது அவர்களின் கடமைகளுக்கு இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டு வந்துள்ளன.

எனினும் வீதி அபிருத்தி அதிகார சபையிடம் சில வர்த்தகர்கள் கடந்த பண்டிகைக் காலத்தில் கட்டணம் செலுத்தியமையால் இவ் விடயங்களில் மக்களுக்கு பொதுப் பாதைகளில் ஏற்படுத்திய தொல்லைகளை பிரதேச சபையால் தடுக்க முடியாத நிலைமைகள் ஏற்பட்டன.

தற்போது வீதி அதிகார சபை பாராமரிப்பிலுள்ள வீதிகளில் வியாபாரம் செய்வதற்கு கட்டணங்களை வர்த்தகர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு முன்னராக பிரதேச சபையின் சிபாரிசினை பெற்று வர்த்தகர்களின் கோரிக்கைகளை பரிசீலிக்குமாறு பிரதேச சபையால் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.

தற்போது வீதி அபிவிருத்தி அதிகார சபையானது பிரதேச சபையின் சிபாரிசுகளை பெற்று வருமாறு பருத்தித்துறை வீதியில் தொல்லைகளை ஏற்படுத்த முனைபவர்களுக்கு (வர்த்தகர்களுக்கு) அறிவுறுத்தி வருகின்றார்கள்.

பிரதேசசபையானது 1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 65(3) பிரிவுக்கு அமைவாக சட்டவிரோதமாக வீதிக்கு தொல்லை ஏற்படும் வகையில் பொருள்களை காட்சிப்படுத்துகின்ற வர்த்தகர்களுக்கு அறிவுறுத்தல்களை எழுத்து மூலமாக வழங்கி வருகின்றார்கள்.

உடனடியாகபொதுவழித்தொல்லைகளை அகற்றுவதற்கு உடன்படாத வர்த்தகர்கள் மீது சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை செயலாளர் கணேசன் கம்ஸநாதன் தெரிவித்துள்ளார்.

இவ்வருடம் நெல்லியடி நகரப் பகுதியில் பொதுமக்கள் நெருக்கடியின்றியும் தமிழ் புத்தாண்டுக்கான பொருள்களை இடையூறின்றியும் கொள்வனவு செய்வதற்கு ஏதுவாக பொது வழித் தொல்லைகளை அகற்றுவதே மிக பிரதான கடமையாக உள்ளதாகவும் சபையின் செயலாளர் தெரிவித்துள்ளார். இச் செயற்பாடுகளுக்கு அனைத்து வர்த்தகர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என சபையின் செயலாளர் கோருகின்றார்.

# வவுனியாவில் வேட்பாளர்களிற்கு தேர்தல் தொடர்பான அறிவுறுத்தல்

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ள வவுனியா மாவட்ட வேட்பாளர்களிற்கான தேர்தல் தொடர்பான அறிவுறுத்தல் தொடர்பானகூட்டம் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்றிருந்தது.

வவுனியா தேர்தல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நகரசபை கலாசார மண்டபத்தில் குறித்த கூட்டமானது இடம்பெற்றிருந்தது.

வவுனியா மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் பி.ஏ.சரத்சந்திர, மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் சி.அமல்ராஜ் ஆகியோர் தேர்தல் நடவடிக்கை மற்றும் பிரசார நடவடிக்கைகளின் போது வேட்பாளர்கள் கட்சிகள், சுயேச்சைக்குழுக்கள் செயற்பட வேண்டிய விதிமுறைகள் தொடர்பாகவும், தேர்தல் சட்ட திட்டங்கள் தொடர்பாகவும், பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் அறிவுறுத்தல்களை வழங்கியிருந்தனர்.

இதில் வவுனியா மாவட்டத்தில் உள்ள ஐந்து உள்ளூராட்சி சபைகளில் போட்டியிடும் வேட்பாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

100




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.04.2025இல் வெளியிடப்பெற்றது